
ரூ. 8.00



மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்



திருக்கோளக்குடி திருக்கோயில் நன்னீராட்டு விழா 9-9-2015

திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி - புரட்டாசி
ஆகஸ்ட் - அக்டோபர் 2015

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046	மாதம் : ஆவணி - புரட்டாசி
மலர் : 30	இதழ் : 8-9

பறந்தது! மனித நேயப் பறவை!

டாக்டர் அப்துல் கலாம்! மகத்தான மந்திரப் பெயர்! இந்திய இளைஞர்களின் எழுச்சி நாயகர்! நம்மைக் கனவுக் காணச் சொன்னவர்! கனவாய் மறைந்து போனார்!

சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மைய விழாவில் கலாம் அவர்களுடன் முதல் சந்திப்பு. டாக்டர் கலாம் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற விழா. நமது உரை கேட்டு நெகிழ்ந்து போனார். மேடையிலே தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பின் ஒரு நீண்ட நெடிய கடிதம் நமக்கு எழுதி இருந்தார். அந்த அன்பின் தொடக்கம் அன்று ஆரம்பமானது. பிறகு சில நேரங்களில் விமான நிலையங்களில் சந்திப்போம். "நான் ஒரு இலட்சம் இளைஞர்களைச் சந்திக்கப் போகிறேன். அது என் இலக்கு! நீங்களும் அதிகம் இளைஞர்களைச் சந்தியுங்கள்" என்று அன்பொழுகக் கூறினார்.

பிறகு அழகப்பா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவர், விழா முடிந்ததும் பார்வையாளர் வரிசையில் இருந்த நம்மை நோக்கி பாதுகாப்பு வளையத்தினை தளர்த்தி அருகில் வந்து அன்பொழுக நலம் விசாரித்துப் பேசினார்.

பிறகு சில ஆண்டுகள் கழித்து, காந்தி கிராமப் பல்கலைக் கழக அறிவியல் பேரவை மாநாட்டைத் தொடங்கி வைத்து

உரையாற்ற வருகை தந்த பொழுது அவர் அருகே அமர்ந்து அந்த விழாவில் பங்கேற்கும் வாய்ப்பு. விழாவில் நமது உரை கேட்டு மிகவும் நெகிழ்ந்து பேசினார். குன்றக்குடிக்கு அவசியம் வருவேன் என ஆர்வமுடன் கூறினார்.

பிறகு அண்மையில் தில்லி தமிழ்ச் சங்க விழாவில் நாம் கலந்து கொண்ட பொழுது, தமிழ்ச் சங்க விழாவினை தொடங்கி வைக்க வருகைபுரிந்த கலாம் அவர்களைச் சந்திக்கும் நல்வாய்ப்பு! மிகவும் மகிழ்ச்சியாக நம்மோடு உரையாற்றினார்.

அதற்குப் பிறகு கலாம் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பைக் காலம் தரவில்லை. கலாம் அவர்கள் காலம் ஆகிவிட்டார். முக்காலத்தையும் உணர்த்திய தீர்க்கத்தரிசி ஆகிவிட்டார். தினந்தோறும் தினந்தோறும் தினத்தாள்களை வீடு வீடாய்ப் போட்டுவிட்டுப் பள்ளிக்குச் சென்ற அவர், பின்னர் தினந்தோறும் தினந்தோறும் தினத்தாள்களின் தலைப்புச் செய்தியாய் மாறினார்.

வறுமை ஏழ்மையைத் தாண்டி அவர் அறிவுத் தாகத்தோடு கற்று வந்தார். ஒருமுறை சென்னை ஐ.ஐ.டி.யில் அவர் படித்துக் கொண்டிருந்தபோது, அவர் சொந்த ஊரான இராமேசுவரத்தை அடுத்த தனுஷ்கோடியைப் புயல் தாக்கியிருந்தது. தனுஷ்கோடி தடம் தெரியாமல் அழிந்தது. ராமேசுவரம் சென்ற இரயில் கடலில் அடித்துச் செல்லப்பட்டது. அவரின் சொந்த வீடும், அவர் அப்பாவின் படகும் புயலால் சேதப்படுத்தப்பட்டன.

அம்மாவையும், அப்பாவையும் சொந்த ஊருக்குச் சென்று பார்த்து வர, கையில் காசில்லை. புத்தக அலமாரியில் ஒரு புத்தகத்தை எடுத்துப் பழைய புத்தகக் கடைக்கு போனார் கலாம். புத்தகக் கடைக்காரர் அந்தப் புத்தகத்தைப் பார்த்து விட்டு, "இது உனக்கு பரிசாய்க் கிடைத்தப் புத்தகம் ஆயிற்றே. இதை ஏன் விற்கப் போகின்றாய்?" என்று கேட்டார். "எங்கள் ஊர் ராமேசுவரம். புயலால் பாதிக்கப்பட்டு எங்கள் வீடும்

சேதப்படுத்தப்பட்டுள்ளது. அம்மா, அப்பாவைப் பார்த்து வரப் போவதற்கு கையில் காசில் லை. அதனால் தான் இப்புத்தகத்தை விற்று ஊருக்கு போகப் போகிறேன்" என்றார்.

கடைக்காரர் அப்துல் கலாமிடம், "நீ ஊருக்குப் போக எவ்வளவு பணம் வேண்டும்" என்றார். "ஐம்பது ரூபாய் இருந்தால் ஊருக்குப் போய்விட்டு வந்து விடலாம்" என்று சொன்னார் கலாம்.

புத்தகக் கடைக்காரர் சொன்னார். நான் இந்தப் புத்தகத்தை வாங்கியவுடன் வாடிக்கையாளரிடம் உடனே விற்று விடுவேன். இந்தப் புத்தகத்தை உனக்காக நான் விற்காமல் வைத்திருக்கிறேன். ஐம்பது ரூபாய் உனக்கு நான் தருகிறேன். ஊருக்குப் போய்விட்டு வந்து ஐம்பது ரூபாயைத் திரும்பக் கொடுத்துவிட்டு உன் புத்தகத்தை வாங்கிப் போ" என்றார் கடைக்காரர். ஐம்பது ரூபாய் பெற்றுக் கொண்டு, அந்தப் புத்தகம் பற்றிய சிந்தனையாகவே ஊருக்குப் போனார் கலாம். புயல் சேதத்தை விடப் புத்தகத்தை இழந்து விடுவோமோ என்ற ஏக்கம் தான் அவர் மனதை வாட்டியது.

ஊர் சென்று வந்து ஐம்பது ரூபாயைத் திரும்பக் கடைக்காரரிடம் கொடுத்து, புத்தகத்தைத் திரும்பப் பெற்றவுடன் தான் கலாமிற்கு மனதில் நிம்மதி. அறிவை அடமானம் வைக்கின்ற தலைமுறைக்கு மத்தியில் புத்தகத்தைக் கூட அடமானம் வைக்க விரும்பாத கலாம் அவர்களின் அறிவுத் தாகத்தை இளைய தலைமுறை உணர வேண்டும்.

அக்னி ஏவுகணை வெற்றிக்கரமாக விண்ணில் செலுத்தப்பட்ட பிறகு, லட்சம் மரக்கன்றுகள் நடச்சொன்னார். எதிலும் இயற்கையின் நேசம். மனித நேயம்.

ஏவுகணைகளின் வெற்றிக்கோ, விண்வெளித் துறையில் தமது சாதனைகளுக்கோ பெருமைப்படாத அவர், ஊனமுற்ற

குழந்தைகள் நடப்பதற்குத் தேவையான ஊன்றுகோலைத் தயாரிக்கும் உலோகத்தைத் தன் ஆய்வகம் கண்டறிந்ததற்குத் தான் கடவுளுக்குக் கோடி நன்றிகள் மகிழ்வுடன் சொன்னார் கலாம்.

தன் ஆசிரியர்கள் மீது மிகுந்த நன்றி செலுத்தியவர். மரணத்திற்குச் சில தினங்களுக்கு முன்பு கூடத் தம் ஆசிரியரைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். எப்பொழுதும் மாணவர்களைச் சந்திப்பதிலும், அவர்களோடு உரையாடுவதிலும், அவர்களின் எதிர்காலத்தை தேசத்தின் எதிர்காலமாக எண்ணியவர் டாக்டர். கலாம் தான்.

தனது வாழ்க்கை வரலாற்றைக் கூறும் ‘அக்னி சிறகுகள்’ என்ற நூலின் கடைசிப் பகுதியில் தம் வாழ்வின் நிறைவாகக் குறிப்பிடுகின்றார்.

உலக வழக்குப்படி எனக்கு எந்தப் பரம்பரைச் சொத்தும் இல்லை; நான் எதையும் சம்பாதிக்கவில்லை; எதையும் கட்டி வைக்க வில்லை. என்னிடம் எதுவுமே கிடையாது. குடும்பம், மகன்கள், மகள்கள் – யாருமே எனக்குக் கிடையாது.

இந்த மாபெரும் நாட்டில்
நான் நன்றாகவே இருக்கிறேன்.
இதன் கோடிக் கணக்கான
சிறுவர், சிறுமிகளைப் பார்க்கின்றேன்.
எனக்குள்ளிருந்து அவர்கள்
வற்றாத புனிதத்தை முகந்து
இறைவனின் அருளை
எங்கும் பரப்ப வேண்டும்.
ஒரு கிணற்றிலிருந்து
நீர் இறைக்கிற மாதிரி,

91/1

மற்றவர்கள் என்னை உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு சில ஆத்மாக்களாவது உத்வேகம் பெறும் என்றும், ஆன்மீக உணர்வு நிறைந்த வாழ்க்கையில் தான் முழுமையாக திருப்தி காணமுடியும் என்ற சமநிலைக்கு வரக்கூடும் என்றும் நம்புகிறேன். இறைவனின் கருணைதான் உங்களுடைய பரம்பரைச் சொத்து. எனது கொள்ளுத்தாத்தா அவுல், தாத்தா பக்கீர், அப்பா ஜெயுனுல்லாபுதீன் ஆகியோரின் இரத்தப்பந்தம் அப்துல் கலாமுடன் முடிந்து விடலாம். ஆனால் ஆண்டவனிடம் கருணைக்கு என்றுமே முடிவில்லை. நிரந்தரமானது அது.

இதுதான் அப்துல்கலாம் உலகமக்களுக்கு வழங்கிய நிறைவுப் பிரகடனம்.

மரணம் கூட ஒரு தாய் குழந்தையை வாரி அணைப்பது போல அவரை அள்ளிச் சென்று விட்டது.

குழந்தைகளைக் காதலித்த இந்தக் குழந்தைகளின் காதலன் ராமேசுவரம் புனித மண்ணில் விதைக்கப்பட்ட நாளன்று குன்றக்குடியில் மௌன ஊர்வலம் நடத்தி, கனத்த இதயத்துடன் இரங்கல் உரை ஆற்றி இறுதி அஞ்சலி செலுத்தினோம்.

உலக அரங்கில் இந்திய தேசத்தைப் உயர்த்திப் பிடிக்க உயரப் பறந்த டாக்டர் கலாம் விண்வெளி விஞ்ஞானி எப்பொழுதும் மனிதம் சார்ந்ததாகவே இருந்தார்.

நீயே கண்டுபிடி என்று ஒவ்வொருவரையும் விஞ்ஞானியாக்கும் அறிவியல் பாதையில் எல்லோரையும் கனவுக் காணச் சொன்ன டாக்டர் கலாம் அவர்களின் கனவுகளை நனவாக்குவோம். அதுவே கலாம் அவர்களுக்குச் செய்கின்ற உண்மையான புகழ் அஞ்சலி ஆகும்.

என்றும் வேண்டும் இன்பம் அன்பு

பொன்னம்பல அடிகளார்

திருக்கோளக்குடி திருக்கோளநாத சுவாமி திருக்கோயில் நன்னீராட்டு விழா

(தவத்திரு பொன்னம்பல அடிகளார்)

செப்டம்பர் 9, 2015 அன்று நமது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத் திருக்கோயில்களில் ஒன்றாகிய ஆன்மநாயகி உடனுறை சுகோளபுரீசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக, திருவருளும், குருவருளும் துணை நிற்க நிறைவேறியது.

கடந்த 1994 ஆம் ஆண்டு நம் மகாசன்னிதானத்தின் சீரிய தலைமையில் திருக்கோளக்குடி திருக்கோயில் திருக்குடமுழுக்குவிழா நடைபெற்றது. அப்பொழுது 1994 இல் மூன்று மாதம் தினந்தோறும் சென்று திருப்பணிகளை நிறைவேற்றும் நல்வாய்ப்பு மகாசன்னிதானம் அருளினார்கள்.

இப்பொழுது திருக்கோளக்குடித் திருக்கோயில் முழுவதும் திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளது,

திருக்கோயில் மேல்தளம் முழுவதும் தட்டு ஓடுகள் பதிக்கப்பெற்றுள்ளது. திருக்கோயில் முழுவதும் ரசாயன கலவை பூசப்பெற்று, சுண்ணாம்பு வண்ணக் காரைகள் நீக்கப்பெற்றுப் புதுப்பொலிவு படுத்தப்பட்டது. திருக்கோயில் முழுவதும் புதிய வயரிங் செய்யப்பட்டு, மின் விளக்குகள் மூலம் பொலிவு ஏற்றப்பட்டுள்ளது.

கண்காணிப்பு கேமரா மற்றும் பாதுகாப்பு அலாரம் பொருத்தப்பட்டுள்ளது.

பிள்ளையார் திருக்கோயில் முன்பு புதிய R.C.C. காங்கிரிட் மண்டபமும், மலைக்கோயில் முழுவதும் பக்தர்கள் வெய்யில், மழை பாதிப்பின்றி வழிபாடு செய்து வர தகரத்தால் ஆகிய நிழற்கூரைகள் அமைக்கப்பட்டுள்ளது.

திருநாள் மண்டபம் முகப்பு, திருக்கோயில் முகப்பு தகரத்தால் ஆகிய நிழற் கூரை அமைக்கப்பெற்றுள்ளது.

திருக்கோயில் வாகன மண்டபம், களஞ்சிய மண்டபம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

திருமடத்தில் தங்கும் அறை புதுப்பிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் அலுவலகம் புதிதாகக் கட்டப்பெற்றுள்ளது. பக்தர்கள் மலை ஏறி சென்று வர படிகளில் கைப்பிடி (Stainless Steel) அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கோயிலின் அனைத்து விமானங்களும் புதுப்பிக்கப் பெற்று, பொலிவும், வண்ணப் பூச்சும் பெற்று அருள் ஓலக்கம் எழுப்பப் பட்டுள்ளது.

'தமிழக அரசு இந்து சமய அறநிலையத் துறை 13 வது நிதி ஆணைய உதவியுடனும், உபயதாரர்களின் பங்களிப்புகளுடனும் திருப்பணிகள் சிறப்பாக நிறைவேற்றப் பட்டுள்ளது. குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

திருப்பணிகள் மற்றும் குடமுழுக்குவிழா உபயதாரர்கள் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள், ஆதீன கௌரவ முகவர் ஆதீனமிளகி சம்பந்தி கோவை அழகு ஜெயபாலன், அறந்தாங்கி ப. அருணாசலம் செட்டியார், அவரது மகன் சுப்பு என்ற சுப்பிரமணியன் மற்றும் அவர்கள் குடும்பத்தார்கள், அரிமழம் MSM. சோமு. அரிமழம் MSM பழநியப்பன். சென்னை அபிராமி இராமநாதன் செட்டியார், ஈரோடு MR கலர்லேப் லெ. நாராயணன், அரிமழம் முத்துப்பட்டிணம் ராமச்சந்திரன், ஹைடெக் குட்வில் G.செல்வகணபதி, மிதிலைப்பட்டி வள்ளியப்பன் மற்றும் பங்காளிகள், பொன்னமராவதி நகர் மன்றத்தலைவர் ராஜா அம்பலக்காரர், ஆதிகாலத்து அலங்காரமாளிகை AP.மணிகண்டன், பொன்னமராவதி கரு.வே. மாணிக்கவேலு, பொன்னமராவதி விசாலாட்சி சதாசிவம், ராங்கியம் VNCT வள்ளியப்பன், ராணிப்பேட்டை திரு,கிருஷ்ணன், திருக்கோளக்குடி

S. பரமசிவம், சிங்கப்பூர் வாழ் திருக்கோளக்குடி இளைஞர்கள், திருக்கோளக்குடி கரு. வீரபத்திரன், திருக்கோளக்குடி S.முத்துராமலிங்கம், திரு. மணிமுத்து, திருமதி. கவிதா முத்துப்பாண்டி, ராகவேந்திரா குரூப்ஸ் KV. ராம்மோகன், திரு. ஆதவா செல்வக்குமார் (ஆதவா ரியல் எஸ்டேட்), கோட்டையிருப்பு வீரணன் அம்பலம், ஆத்தூர் கிராமத்தார்கள், மிதிலைப்பட்டி கிராமத்தார்கள், மிதிலைப்பட்டி லெட்சுமணன் செட்டியார், தான்தோன்றீசுவரர் கோயில் தர்மகர்த்தா, மின்னல்குடி துரைச்சாமி அம்பலம், குன்றக்குடி தையல்நாயகி தியாகராசன், ஈரோடு அ. திருநாவுக்கரசு, ஈரோடு அருள்நெறி திருக்கூட்டத்தினர், திருக்கோளக்குடி SP. சிங்காரவேலு, பழையத் திருக்கோளக்குடி வெள்ளைச்சாமி, அபிராமி ராமனாதன், கோதையப்பன், லெ. சரவணன் ஆகியோரின் பங்களிப்புகளால் திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு விழா சிறப்பாக நிறைவேறியது. உபயதாரர்கள் அனைவருக்கும் நன்றி! நல்வாழ்த்துக்கள்!

இத்திருக்கோயில் திருப்பணிகளையும், குடமுழுக்கு பெருவிழாவிற்கும் முழுமையாக நின்று பணியாற்றிய நம் ஆதீன ஐந்து கோயில் மேலாளர், நேர்முக உதவியாளர் திரு. க. நீலமேகம், பால்பண்ணைச் செயலர் திரு. வ. தியாகராசன், திருக்கோயில் கண்காணிப்பாளர் திரு. கேசவன், பொறியாளர் திரு. சுப்பிரமணியன், திரு. ஜெகநாதன், மின் பொறியாளர் திரு. செல்லையா, திரு. பழனி ஸ்தபதி ஆகியோர் முழுமையாக தொடக்கம் முதல் நிறைவு வரை கூட்டு முயற்சியும் ஒத்துழைப்பும் தந்து நிறைவேற்றினார்கள். நேர்முக உதவியாளர்கள் திரு.மரு.பரமகுரு, திரு. S.செல்வராஜ், நம் ஆதீன பணியாளர்கள் கல்யாண சுந்தரம், சிங்கார வடிவேல், ராஜசேகர், பழனிக்குமார், காளிதாஸ், முத்தையன், பிரான்மலை பள்ளித் தலைமை ஆசிரியர் நாச்சிமுத்து, டிரைவர் மணி, பழனி முதலியோர் இப்பணிகளில் முழுமையாக ஈடுபட்டனர்.

திருக்கோளக்குடி மாரிமுத்து, நல்லமுத்து, தானாதி, கருப்பையா, சுப்பிரமணியன் ஆகியோர் முழுமையாக இப்பணிகளில் பங்கேற்றனர்.

திருக்கோயில் ஸ்தானிகக் குருக்கள் நமச்சிவாயம், அவரது மகன்கள் சோமசுந்தர குருக்கள், நாகராஜ குருக்கள், மருமகன் சுப்பிரமணிய குருக்கள், சபாபதி குருக்கள், மானாமதுரை தெய்வசிகாமணி பட்டர், கனகசபாபதி பட்டர், சுப்பிரமணியன் என்ற அம்பி குருக்கள், அவரது மைத்துனர் சிவானந்த பட்டர் முதலியோர் திருப்பணிகள், யாகசாலை வேள்விப் பணிகள், குடமுழுக்கு விழாவினையும் சிறப்பாக நிறைவேற்றினார்கள்..

நமது சிவத்திரு பிச்சைக்குருக்கள், திருப்பரங்குன்றம் ராஜா பட்டர் ஆகியோர் யாகசாலை பணிகளை சிறப்புறத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்தார்கள்.

மின்னல்குடி, திருக்கோளக்குடி, ஆத்திரம்பட்டி அம்பலங்கள் மற்றும் கிராமத்தார்கள் முழுமையாக இரவு பகல் பாராது இத்திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் பணியாற்றி ஒத்துழைப்பு நல்கினார்கள்.

நமது I.T.I. மாணவர்கள் மற்றும் திருமதி. திலகவதி அய்யப்பன், I.T.I. செந்தில் மற்றும் அனைத்து ஆசிரியர்களும், பணியாளர்களும் திருக்கோயிலில் மண்டிக்கிடந்த முள்செடி, கொடிகளை அகற்றி சிறப்புடன் பணியாற்றினார்கள்.

யாகசாலை நிகழ்ச்சிகளில் நம் தருமை ஆதீன குமாரசாமித் தம்பிரான், திருப்பனந்தாள் இணை அதிபர் தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள், சிரவை ஆதீனம், பேரூர் இளைய அடிகள், துலாவூர் ஆதீனம், பாதரக்குடி ஆதீனம் ஆகியோர் கலந்து சிறப்புச் செய்தார்கள்.

இரத்தினகிரி தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு பெரும் சிறப்பு செய்தார்கள்.

திருப்புத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. K.K. உமாதேவன் அவர்களும் இந்நாள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அறநிலையத் துறை அமைச்சருமாகிய திருமிகு. KR. பெரியகருப்பன் அவர்களும் யாகசாலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தார்கள்.

திருக்கோயில் திருப்பணிகளிலும், குடமுழுக்கு விழா நிகழ்வுகளிலும் அறநிலையத் துறை அமைச்சர், ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், ஆய்வர் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களின் நல்லுதவியாலும் மற்றும் வழிகாட்டுதலாலும், கிராமத்தார்கள், அன்பர்கள், ஆதீன திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரின் முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் சிறப்புடன் நடந்தேறி உள்ளது.

திருக்கோளக்குடி ஊராட்சி மன்ற ஒத்துழைப்புடன் அரசு மருத்துவமனை, காரைக்குடி அப்போலோ மருத்துவமனை மூலம் அவசர மருத்துவ முதலுதவி சிகிச்சையும், காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறை பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறப்புறவே அமைந்தது.

திருக்கோயில் திருப்பணிகளுக்கும், குடமுழுக்கு பெருவிழாவிற்கும் உறுதுணையாய் விளங்கிய அனைவருக்கும் நன்றி! நல்வாழ்த்துக்கள்!

அனைவரையும் காக்கும் காவல் தெய்வம் ஆன்மநாயகி உடனுறை ககோளபுரிசுவர் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திப்போம்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!



நேர் பாதைதான் நல்ல பாதை.
கடந்து செல்ல அதிக நேரம் ஆகும்.
ஆனாலும் அதுவே சிறந்த வழி

– **காந்தியடிகள்**

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

அறியாது கெட்டேன்!

நோய்! புதிய நோய்கள்! உடல் நோய்! ஆன்மாவின் நோய்! ஏன் நோய்? எதனால் நோய்? காரணங்களைத் தேடின் மூச்சு வாங்கும்! ஓர் உண்மை புலனாகிறது! நோய்க்குரிய காரணங்களில் பழையன மட்டுமல்ல! புதியனவும் உண்டு! பழைய காலத்தில் அழுக்காறு என்ற நோய்க்குக் காரணம் உடைமைச் சார்புடையதாகவே அமைந்திருந்தது. இன்றோ புகழும் காரணமாக அமைந்திருக்கிறது! நோய் இயற்கையன்று! நோய்க்குப் பழ வினைகள் காரணமல்ல. நோய் செயற்கை, நோய் வரவேற்றுக்கொள்வது! நோய்க்கும் இவன் புதியவனே! சுவை நாடி உண்டமை, உழைப்பில்லாத வாழ்க்கை, தூய்மையற்ற உடல், தூய்மையற்ற மனம், கெட்டபுத்தி, அறியாமையின் இரும்புப் பிடியில் சிக்கிய ஆன்மா இவையெல்லாம் நோய்க்குக் காரணங்கள்!

உலகம் முன்னேறுவது, நொடிகள் தோறும் முன்னேறுவது. ஒரு நொடிப் பொழுது அயர்ந்தாலும் உலகம் நெடுந்தொலைவு போய்விடும்! நாம் பின்தங்கிவிடக்கூடாது! துறைதோறும் முன்னேற்ற நிலை பராமரிக்கப் பெறுதல் வேண்டும். அறிவில் பிற்பட்டிருந்தால் – அறிவிருந்தாலும் உலக அறிவை நோக்க அறியாமையாகவே கொள்ளப்பெறும்! அறிவு வளர்வது; இடையீடின்றித் தொடர்ந்து வளர்வது! "அறிதோறும், அறியாமை" என்று திருக்குறள் பேசும்! இன்றைய அறிவே அறிவு; வாழ்க்கைக்குக் கைகொடுக்கும் அறிவு; உழைப்பு. உழைப்புத் திறன் வளரும் இயல்பினது. உடலியக்கத்திற்குரிய உணவு, உழைப்பின் வழியேதான் படைக்கப்படுகிறது! உழைத்து உண்பது அறம்! உழைத்து உண்பது ஒழுக்கம்! அறிவின் ஆக்கத்தில் பின்னடைவு; உழைப்பில் பின்னடைவு! இங்ஙனம் துறைதோறும் பின்னடைவுகள் தோன்றின் நோய்க்கு ஆளாவது இயற்கை!

நோய்வாய்ப்பட்ட பிறகு நெஞ்சில் கவலை பிறக்கும்; துன்பமும் துயரமும் வருத்தும்; அமைதி விடைபெறும்; இன்பம் விலைப்பொருளாகிவிடும்; வாழ்க்கை கசக்கும். ஆதலின் பிற்படா நிலையில் நொடிகள் தோறும் துறைதோறும் முன்னேற்றத்தைப் பராமரிக்க வேண்டும். மாணிக்க வாசகர் நோய்க்கு எளிதில் இரையாகக்கூடிய அமைச்சுப் பதவியில் இருந்தார். அமைச்சுப் பதவி

"கடின"மான பதவி. ஆன்ம நலன்களைக் கெடுக்கும். அதிகாரம் அமைச்சுப் பதவிக்கு உண்டு! இருக்கும் இடம் உயரமானது! பெரிய இடத்தில் சின்னப்புத்தி தலைகாட்டும். ஆனால், உடலும் ஆன்மாவும் எளிதில் நோய்வாய்ப்படும் நிலை; ஆன்ம நலன்களில் பிற்பட்ட நிலை!

பிற்பட்ட நிலை மாற்றப்படுதல் வேண்டும். முன்னேற்றம் தேவை. முன்னேற்றம் கருதிய வாழ்க்கைக்கு முதலில் உரிய சுற்றம் அமைய வேண்டும்! நல்ல பழக்கங்கள் வேண்டும்; வழக்கங்கள் வேண்டும். ஒருவருக்குக் கெட்ட பழக்கங்கள் எளிதில் விலை இல்லாமலே கூடக் கடைவீதியில் கிடைக்கும்! ஆனால் நல்ல பழக்கங்கள் எளிதில் கிட்டக்கா. வழக்கங்கள் சொல்லவே வேண்டாம்! நல்ல பழக்கங்கள்தான் நல்ல வழக்கங்களாக மாறுகின்றன. ஆன்மா சிறந்த நலன்களைப் பெற்று முன்னேற வேண்டுமாயின் நல்லோர் கூட்டு வேண்டும். நல்லோர் இணக்கம் வேண்டும். நல்லோருடன் பழக வேண்டும். அங்ஙனம் தேர்ந்தெடுத்துப் பழகும் நல்லோரும்கூட வழி வழி நல்ல மரபினராயிருந்தால் காலம், தேசம், வர்த்தமானம் அவர்களை மாற்றா. அவர்களே பழ அடியார்கள்; என்றும் நல்லவர்கள்! தற்காலிகமாக இன்று பிழைப்புக் கருதி அடியார்களானவர்கள் பிச்சைக்காரர்கள்! இவர்களில் நடிப்பவர்களும் இருக்கலாம். பழைய அடியாரொடும் பழுத்த மனத்தடியாரொடும் கூட்டு இருந்தால் அவர்கள் நம்மை வளர்ப்பார்கள். நம்மைப் பாதுகாப்பார்கள். காலைக் கதிரவன் ஒளியில் தோயும் இமயம் பொன்னொளி பெற்று விளங்கும். அப்போது அந்த இமயத்தைச் சார்ந்த காக்கையும் பொன்னொளி பெற்று விளங்கும். இமயம் சார்ந்த காக்கை பொன்னிறம் பெறும் என்பார் விபுலானந்தர். பழைய அடியாரொடும் கூடி வாழாமல் அரசன், அமைச்சர்கள் படைத்தளபதிகள் ஆகியோருடன் கூடி வாழ்ந்து கழிந்த காலத்தை மாணிக்கவாசகர் எண்ணி வருந்துகிறார். பழைய அடியாருடன் கூடி வாழ்ந்தால் நோய் வராது. பிற்படுத்தலுக்குரிய சூழலும் தோன்றாது. ஆதலால், மாணிக்கவாசகர் பழைய அடியாருடன் கூடி வாழ்தலை விரும்புகின்றார்.

பழைய அடியாருடன் கூடி வாழ்தல் எப்போது கிடைக்கும்? பழைய அடியார்கள் பழுத்த அடியார்கள்! புளியம்பழம் போல் வாழ்கிறவர்கள்! அவர்கள் கூட்டத்தில் சேர்வது கடினம்! அவர்களுடன் கூடி வாழ்வது கடினம்! நெய், வேப்பெண்ணெய் என்று வேறுபாடு கருதாது சுவையுணர்வு கெட்டு உண்ணும் பழக்கம் வேண்டும். "நான்" "எனது" என்ற செருக்கறுதல் வேண்டும். காய் கதிர்ச்செல்வனின் கதிரொளிக் கற்றைகளும் மழை வழங்கும் புனலும் மரத்தின் வேர்களும் தாழ்ந்து தாழ்ந்து

செல்லுதல்போலத் தாழ்வெனும் தன்மையுடன் வாழ்தல் வேண்டும். இறைவனிடம் பிறந்து மொழி பயின்ற நாள் தொடங்கி இடையீடின்றித் தொடர்ந்து பத்திமை செலுத்த வேண்டும். பெருமிதமும் வீரமும் செறிந்த அடிமைப் பண்பு வேண்டும்! அன்பிலும் அன்பின் திட்பத்திலும் அன்பின் ஆற்றலிலும் நம்பிக்கை வேண்டும். அச்சத்தைத் தவிர்க்க வேண்டும். "அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை" என்று வாழ்தல் வேண்டும். அச்சம் அன்புக்குப் பகை; உறவுக்கு எதிரி. அச்சம் பத்திமைக்கு எதிரிடையானது. அச்சம் தவிர்த்தவர்களே அடியார்கள்! பழ அடியார்கள்! மாணிக்க வாசகருக்கு அச்சமில்லை! "எங்கு எழில் என் ஞாயிறு" என்றார். ஞாயிறு திரியும் திசை மாறினால் துன்பம் வரும். அத்துன்பமும் தன்னைத் தீண்டாது! இது மாணிக்கவாசகரின் திட்டம்! உறுதி! மாணிக்கவாசகர் அச்சமின்றி வாழ்ந்தார். மாணிக்கவாசகர் "அச்சம் தவிர்த்தாண்ட" சேவனாகிய திருப்பெருந்துறையுறை சிவனுக்கு உடைமையானார். உலகியல் வாழ்க்கையில் உடைமை மிகுதியும் பேணப்படுகிறது. உடைமைக்கு உள்ள மதிப்பு மனிதனுக்குக்கூட இல்லை. காரணம் உடைமை வாழ்க்கைக்குப் பயன்படுகிறது. அருளியல் வாழ்க்கையிலும் ஆன்மிக வாழ்க்கையிலும் உடைமையாதலுக்கு மதிப்பு உண்டு. பங்கமில்லாத உரிமைக்கு உடைமையாதல் அவசியம். அதாவது நம்முடைய தோழனுக்கு நாம் உடைமையாதல், நட்பியல் வாழ்க்கையில் உடைமையான வழி உறவுகள் வளரும்; உரிமைகள் அமையும். நல்ல பாதுகாப்பு கிடைக்கும்; இருபாலும் கிடைக்கும். ஆன்மிக வாழ்க்கையில் இறைவனுக்கு நாம் உடைமையாகிவிட்டால் அவன் நம்மை வளர்ப்பான்; காப்பான்! நாம் கவலையின்றி வாழலாம்! நாம் உலக உடைமைகளுக்கு உரிமைக்காரராக விளங்கும் வரையில் இறைவனுக்கு உரிமைக்காரராதல் அரிது. கடவுளுக்கும் சைத்தானுக்கும் ஒரே நேரத்தில் தொண்டு செய்ய முடியாது. இரண்டு எஜமானருக்கு ஒரே நேரத்தில் சேவை செய்தல் ஒல்லுமோ? மாணிக்கவாசகர் அமைச்சுப் பதவியில் இருந்தவரை அவர், அரசருக்கு உடைமையாக இருந்தார். அமைச்சுப் பதவியை உடைமையாகப் பெற்றிருந்தார். அதுவும்கூட உடைமையாக அல்ல. உடைமையாகப் பெற்றிருந்தால் குதிரைகள் வாங்காததை, திருக்கோயில் கட்டியதைப் பாண்டியன் ஏற்றுக் கொண்டிருப்பான். வரலாறே திசை திரும்பியிருக்கும். பாண்டியனுக்கு மாணிக்கவாசகர் உடைமைக்காரராகவும் இல்லை. அடிமைக்காரராகவே இருந்தார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையை அடைகின்றார். அறிவு நிலை மாறுகிறது; உணர்வு நிலை மாறுகிறது. திருப்பெருந்துறை உறைச்


சிவனுக்கு தாம் உடைமைப பொருள் என்பதை உணர்கின்றார். திருப்பெருந்துறைச் சிவனுக்கு உடைமையாய் – அடிமையாய் வாழ விரும்புகின்றார். திருப்பெருந்துறைச் சிவனைக் கூவி அழைக்கின்றார். திருப்பெருந்துறைச் சிவனுக்கு உடைமைக்காரராக வாழாது கழித்த நாளை நினைந்து இரங்குகின்றார். இதனால் திருப்பெருந்துறைச் சிவன் தன்னைத் தன் உடைமைக்காரன் என்று ஏற்பானா? அங்கீகரிப்பானா? புறத்தே தள்ளி விடுவானே என்று எண்ணி அழுதரற்றிப் பாடிடும் பாடல்கள் என்பையும் உருக்குந்தகையன. பழைய அடியார் நின்பால் வந்தார், நானும் நோயும் புறமே போந்தோம் என்று பாடுகின்றார். இறைவனை, திருப்பெருந்துறைச் சிவனைக் காண நாணி நிற்பதாகப் பாடுகின்றார். "இறைவனுக்கு உடைமைப் பொருளாகிவிட்டால் அவன் வாழ்விப்பான்! பாரம், தோள் மாறும்!" "என்ன குறையும் இலோம்" என்று வாழலாம். மாணிக்கவாசகரின் துன்பம் நீக்க, திருப்பெருந்துறைச் சிவன் குதிரைச் சேவகனாக, கொற்றாளாக வந்தருளிய பாங்கினை அறிக.

இறைவன் உறவே பழைய உறவு! இருள் மலத்துள் மூலையில் முடங்கிக் கிடந்த ஆன்மாவைக் கருவி, கரணங்களுடன் இணைத்துப் பிறப்பில் ஈடுபடுத்தி அறிவொளிக் கதவைத் திறந்ததே இறைவன்தானே. இறைவன் நமக்கு நன்றே செய்தான்! யாதொரு பிழையும் செய்தானில்லை! இறைவன் ஆன்மாவுக்கு மானுடம் என்ற மதிப்புயர் வாழ்க்கையைத் தந்தருளினான். மானுடம் என்ற நிலை, வரலாறு படைப்பது. மானுடம் ஆற்றல் மிக்கது; படைப்பாற்றலுடையது. அறிவுப் புலன்கள்! படைப்பாற்றல் உடையது உடல்! படைப்பாற்றலுக்குரிய உலகம்! அன்பு சுரக்கும் இதயம்! அம்மம்ம! இந்த மானுடப் பிறவியின் ஆற்றலை வியந்து எழுத ஏது சொற்கள்! அற்புதமானது! அற்புதமானது! மானுடமாகிய வாழ்நிலையை ஆன்மாவுக்கு இறைவன் தந்தருளினன். இறைவனால் யாதொரு குறையும் இல்லை! நமக்குத்தான் இறைவன் அளித்த மானுடப் பிறப்பின் அருமை புரியவில்லை! உலகம் பற்றிய அறிவு இல்லை! பொறிபுலன்களை ஆட்சி செய்யத் தெரியவில்லை. வண்டிக்காரன் மாடு இழுத்த வழிக்கு வண்டியை விட்டுவிடுவது போல, நமது வாழ்க்கையை மனம் என்ற குதிரை இழுத்தவழி விட்டுவிட்டுத் துன்பத்தை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு அழுகின்றோம்; புலம்புகின்றோம்! இந்த உலகம் துன்பமானது என்று முகாரி ராகம் பாடுகின்றோம். வாழ்க்கையைக் கசப்பாக்கிக்கொண்டு ஒன்று கொலை செய்கின்றோம். அல்லது தற்கொலை செய்து கொள்கின்றோம்! ஏன் இந்த அவலம்?

இன்பமாக வாழ இறைவன் மானுடம் என்ற பதத்தை அருளினன். இறைவன்பால் குறையில்லை! என்றும் இன்பமாக வாழலாம். ஆனால் நாம்மானுடத்தின் இயல்பு அறியாது கெடுத்தோம்! கெட்டுப்போனோம்! இம்மையையும் இழந்தோம்! மறுமையையும் இழந்தோம்! இறைவனுக்கு உடைமைக்காரனாகாமல் பொறிகளுக்கே உடைமையானோம். நம்மை உடைமையாகப் பெற்ற பொறிகளும் புலன்களும் இச்சைக்கு ஆளாக்கி அடிமையாக்கி இந்த வாழ்க்கையை சொத்தையாக்கிவிட்டன. நன்னெறிப்படுத்தும் பழைய அடியாரொடும் கூடுவதில்லை. மாறாக நகர் திரிதரு நம்பியருடன் கூட்டு! வறுமொழியாளரொடு கூட்டு! வம்பப் பரத்தரொடு கூட்டு! இதனால் வாழ்நிலை பின் தங்கிவிட்டது! என்னை ஒத்தார் எங்கோ சென்று உயர்ந்து விட்டனர். நமது நிலை பின் தங்கிய நிலை. வாழ்வு பின் தங்கியது மட்டுமா? நோய்க்கு விருந்தானோம்!

இதிலிருந்து தப்ப என்ன வழி? மானுடம் என்ற பதந்தந்த வாழ்முதலை, இறைவனை நினைந்து நினைந்து அவனுக்கு உடைமைப் பொருளாக எண்ணி அருள் பாலிக்கும் பணிகளைச் செய்து வாழ்தலே வழி! இந்த வழியில் செல்வதற்குத் திருவாசகம் துணை!

என்னால் அறியாப் பதந்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னாள் உன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியா ரொடுங் கூடாது
என் நாயகமே பிற்பட்டிங்கு
இருந்தேன்! நோய்க்கு விருந்தாயே!



"இந்துப் பண்பாட்டை மையமாகக் கொண்ட குத்துவிளக்கு! கிறிஸ்தவ வழிபாட்டுக்கு ஒளிதரும் மெழுகுதிரி. ஒரு இஸ்லாமியரான எனக்கு இந்த விளக்கேற்றும் வாய்ப்பு. இதுதான் இந்தியா".

– அப்துல்கலாம்

எனவே கலாம் அவர்களின் மனிதநேயச் சாதனைகள் அவருடைய அறிவியல் சாதனைகளுக்கு எந்தவகையிலும் குறைந்தவையல்ல! ஒருவகையில் அவருடைய அறிவியல் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்தவை இந்த ஆன்மீகப் பயிற்சிதான்! நம்பிக்கைதான்! நல்லுறவுதான்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திரு. க. சிவாஜி, அவர்கள்,
(ஓய்வு பெற்ற கூட்டுறவுத்துறை கூடுதல் பதிவாளர்) எழுதியுள்ள
"கூட்டுறவு இயக்க முன்னோடிகள் வாழ்வும் தொண்டும்" என்ற நூலிலிருந்து

குன்றக்குடிப் பகுதியில் முந்திரிக் காடுகள் உண்டு. ஆனால் முந்திரி உற்பத்தி விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காத நிலை நிலவியது. விவசாயிகளின் அறியாமையைப் பயன்படுத்தி இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்து வந்தனர். அடிகளார் இந்த அவல நிலைக்கு ஒரு முடிவு கட்ட விரும்பி பெரியார் முந்திரி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பை 06.04.1979இல் ஆரம்பித்தார். முந்திரியைப் பதப்படுத்த இச்சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் நிறையப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. இதனால் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வந்த அநேக குடும்பங்களின் வறுமையை ஒழித்திட புதிய வழிமுறை கண்டறியப்பட்டது. இங்கு பதப்படுத்தப்பட்ட முந்திரி பருப்பு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இச்சங்கத்தின் முதல் உறுப்பினர் அடிகளார் ஆவார். இதன் தலைவராகவும் இருந்து தொண்டு செய்தார். சங்கத்திற்குத் தொழிற்கூடம் கட்டவும் அலுவலகம் கட்டவும், மடத்துக்குச் சொந்தமான 137 சென்ட் நிலத்தைத் தானமாக வழங்கினார். ஏறத்தாழ ஐநூற்றுக்கும் அதிகமான கிராமப்புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும் அமைப்பாக இச்சங்கம் செயல்பட்டு வருகிறது. (குன்றக்குடி பெரியார் முந்திரி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கக் குறிப்புகள்)

குன்றக்குடியிலிருந்த குளத்தில் மீன் பிடிக்கும் உரிமையை ஏலம் மூலம் பெற்று அதன் பலன்களை ஏபபோகமாக ஒரு சிலர் காலங்காலமாக அனுபவித்து வந்தனர். குளத்தின் பயன்கள் பொது நலனுக்குப் பயன்படும் வகையில் குன்றக்குடி உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கம் 06.07.1984 இல் ஆரம்பிக்கப்பட்டது.அடிகளார் ஆரம்பித்த அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கணிசமான அளவில் தாழ்த்தப்பட்ட மக்களையும் பெண்களையும் உறுப்பினர்களாக்கி சமூகநீதி நிலை நாட்டப்பட அடிகளார் வழிவகுத்தார்.

குன்றக்குடியில் பதினைந்து கூட்டுறவுச் சங்கங்களை சமூகத்தின் பல்வேறு பிரிவினரும் பயனடையும் வகையில் ஏற்படுத்தி அடிகளார் ஒரு கூட்டுறவுச் சமுதாயம் மலரப் பாடுபட்டார்.கூட்டுறவு குறித்து அடிகளார் தெளிவான கருத்துக்கள் கொண்டிருந்தார். வாய்ப்பினை இழந்து வறுமையில் வாழும் மக்களை மேம்பாடுறச் செய்ய கூட்டுறவே மிகச் சிறந்த சாதனம். கூட்டுறவு மனிதர்களை முழுமையாக வளர்க்கும் இயக்கம். கூட்டுறவு தனி மனிதனை சமூக உணர்வு உடையவனாக மாற்றிவிடுகிறது. தனி உடைமைச் சமுதாயத்திலிருந்து கூட்டுடைமைச் சமுதாயம் அமைப்பதற்கு மனித குலத்தை அழைத்துச் செல்கிறது. சமூக மூலதனத்தை உருவாக்குகிறது. ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழும் கட்டாயத்தை உருவாக்கி மனிதனை சமூகம் சார்ந்தவனாக்கி வளர்க்கிறது. மக்கள் ஆட்சிப் பண்பை வளர்க்கிறது. பொறுப்புணர்ச்சியை வளர்க்கிறது. ஆட்சித் திறமையையும் பெற வாய்ப்பளிக்கிறது. (பொன்னீலன்,2003 பக்கம் - 42) அடிகளார் தான் கொண்டிருந்த கருத்துக்களை தமது சிறப்பான நாவன்மையால் தமிழக மக்களிடையே இடைவிடாது பரப்பினார். பேச்சில் எவ்வளவு வல்லமை காட்டினாரோ அதே அளவில் எழுத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார். கவி பாடுவதிலும் உரை நடை எழுதுவதிலும் சிறந்து விளங்கினார். மணிமொழி என்ற பத்திரிகையையும் தமிழகம் மற்றும் அருளோசை என்ற இதழ்களையும் அடிகளார் நடத்தினார்.

கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்கள் குறித்தும், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் குறித்தும் அடிகளார் தனது வாழ்நாள் முழுவதும் எழுதியும், பேசியும் வந்தார். தானே பலதரப்பட்ட கூட்டுறவு சங்கங்களை நிர்வகித்து அனுபவம் பெற்றிருந்தாலும், மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை நுணுக்கமாக ஆய்ந்து தெளிந்திருந்தாலும் அடிகளாரின் கூட்டுறவு பற்றிய சிந்தனைகள் தனிச்சிறப்புடன் விளங்கின.

சமய நெறியாளராக, ஒரு மடாதிபதியாக இருந்து கொண்டு, கூட்டுறவு இயக்கப் பணிகளைத் தாம் மேற்கொண்டதற்கான காரணத்தை அடிகளார் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார். "துன்பப்படும் ஏழைகளின் துயரைத் தீர்க்கும் செயலானது பன்முறை இறைவனை வழிபடுவதைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை இறைவனுக்குக் கொடுக்கும். இந்த அடிப்படையில் நான் குன்றின் மேலிருக்கும் குமரனை வழிபடுவதுடன்

குன்றினடியில் கல்லுடைக்கும் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொடுத்து அவர்கள் துயர் துடைத்து வருகிறேன்". (தவத்திரு குன்றக்குடி அடிகளார், கூட்டுறவு, டிசம்பர் 1974, பக்கம்-14).

குன்றக்குடி அடிகளார் கூட்டுறவுத் தத்துவங்களை எளிய தமிழில் யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் பேசினார். கூடித்தொழில் செய்தால் கோடி இலாபம் பெறலாம் என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை பெறலாம். குறைந்த காலத்தில் - குறைந்த செலவில் - குறைந்த உழைப்பாற்றலின் மூலம் மற்றவர்களுக்கு காழ்ப்போ கசப்போ ஏற்படுத்தாமல் பொருள் தேடிக் குவிக்கும் புதிய முறையின் பெயரே கூட்டுறவு (தவத்திரு பொன்னம்பல அடிகளார்,2002, பக்கம் 57)கூட்டுறவு ஒரு வாழ்க்கைத் தத்துவம். ஒரு வாழ்க்கை முறை. மனித குலத்தின் மேம்பாடு கூட்டுறவின் மூலம் தான் நிகழ முடியும். கூட்டுறவு மனித குலத்தை அகநிலையிலும் புறநிலையிலும் வளர்த்துச் செழுமைப்படுத்தி வளர்க்கும். இந்திய நாட்டில் சோசலிச சமுதாயத்தை - பொதுவுடைமைச் சமுதாயத்தை கூட்டுறவின் மூலமே அமைக்க முடியும். இந்த மகத்தான சாதனையைக் கூட்டுறவுச் சிந்தனையை நிறைய வளர்த்து நமது மக்களை இயல்பான கூட்டுறவாளர்களாக வாழப் பழக்க வேண்டும் என அடிகளார் வலியுறுத்தினார். (தவத்திரு பொன்னம்பல அடிகளார்,2002,பக்கம்-66).

கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணித்து வரும் கூட்டுறவுத் துறை அலுவலர்களின் பணிகள் எங்ஙனம்இருத்தல் வேண்டும் என்பது குறித்து அடிகளார் தெளிவுபடுத்தினார். "கூட்டுறவு நிறுவனங்கள் சீராக நடைபெற அரசின் கண்காணிப்பு அவசியம். ஆனால் எந்தக் காரணத்தை முன்னிட்டும் கூட்டுறவு அரசின் பிறிதொரு அலுவலகமாக மாறிவிடக் கூடாது. கூட்டுறவுத் துறையில் பணி செய்யும் அரசு அலுவலர்கள், தணிக்கையாளர்கள், புலனாய்வுக் காவல் துறையினரைப் போலவும் பிரேத விசாரணை செய்பவர்கள் போலவும் ஆகிவிடக்கூடாது. அவர்கள் கூட்டுறவாளர்களுடன் இயல்பாகக் கலந்து நின்று பழகித் தவறுகள் நிகழ வாய்ப்பில்லாமல் தடுக்க வேண்டும்".



"சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவை இல்லை.
துன்பங்களைச் சந்திக்க தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை." - **அப்துல் கலாம்**

நீதிக்குள் சிலம்பு

(தமிழாகரர். தெ. முருகசாமி)

தமிழிலக்கியப் பரப்பில் சிலப்பதிகாரத்திற்குத் தனியானதொரு சிறப்பிடம் உண்டு. கதையால், கவிதையால், முத்தமிழ் பாவிய முறையால், கற்பனையால், உவமையால், சொல்லாட்சித் திறனால் எனப் பல்வேறு பான்மையில் சிலப்பதிகாரத்திற்குரிய சிறப்பையும் பெருமையையும் பிறவற்றோடு ஒப்பிடும்போது ஏற்றமே எனினும் அவை எல்லாவற்றிற்கும் மேலாக எந்த ஒரு நூலுக்கும் இல்லாத நூலின் முடிவில் கூறும் நீதிகளால் சிலப்பதிகாரம் தனித்தன்மை மிக்கதாகும்.

ஒரு தொழில் நிறுவனத்தின் வரவு செலவுப் பட்டியல் தயாரித்தல் போல (Budget) இளங்கோவடிகள், சிலப்பதிகார இலக்கிய மேலாண்மைத் திறத்தின் வரவு செலவாக அடுக்கிக்கூறும் காப்பிய வடிவில் உள்ள நீதிகள் (Management of Literary Supremacy) உயர்வுடையனவாக உள்ளன.

சிலப்பதிகாரப் பதிகம் கூறும், "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பதுமான மூன்றும் காப்பியத்தின் நோக்கக் கருத்துக்களாக உள்ளன. இவை சிலப்பதிகாரக் கொழிப்பு உண்மைகளாக இருப்பினும் இம்மூன்றையும் திட்டப்படுத்திக் கொண்டே காப்பியம் செய்யப்பட்டுள்ளதால் இம்மூன்றையும் நீதிகள் எனக் கூறமுடியாதவைகளாக உள்ளன. மேலும் பதிகத்தை இளங்கோவடிகள் பாடாததால் இவை இளங்கோவின் குரலும் இல்லை. ஆனால் காப்பிய முடிவில், "என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி, தன் திறம் உரைத்த தகைசால் நல்மொழி தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!" என மக்களை விளித்துக் கூறிய கருத்துக்கள் இளங்கோவின் சொந்தக் குரல்களாக உள்ளதால் அவைகள் காப்பியம் கற்றதன் சாரமாக உணரத்தகும் நீதிகளாக உள்ளன.

கூறப்பட்ட நீதிகள் ஒவ்வொன்றிற்கும் சிலப்பதிகாரத்தில் கதைகள் பொதிந்து காணப்படுதலால் நீதிக்குள் சிலம்பு எனத் தலைப்பிடப்பட்டு ஒவ்வொரு நீதியும் நீதிக்கான சிலப்பதிகாரக் கதையும் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன.

1. பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின், இழப்பும் துன்பமும் வந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் அவற்றை நீங்கி வாழ வேண்டும். இல்லையேல் வாழ்க்கை துவண்டு விடும். காப்பியத்தில் கண்ணகியின் வாழ்வே இதற்கான சான்றாகும். கோவலன், கண்ணகியை மறந்து பிரிந்தாலும் கண்ணகி தன் கணவனை இழந்ததாகவே துன்புறுகிறாள். ஆனாலும் அவள் தற்காத்து தற்கொண்டாற் பேணிச் சோர்விலாதவளாக இருந்ததால் தான் பத்தினிக் கடவுளாக உயர்ந்தாள் என்பது கதைப்போக்கால் உணரும் உண்மை.

2. தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின், தெய்வம் என்பது ஊழ். வாழ்வில் ஏற்படும் சிலவற்றிற்கான காரணம் கூறமுடியாத சூழல் ஏற்படுவதற்கு கொள்ளும் ஓர் அமைதிக்கு ஊழ் என்று பெயர். இதனைத் தொல்காப்பியர் பால்வரைத் தெய்வம் என்பார். கோவலன் செய்த முற்பிறவியின் வினை, துரத்தியதால் கண்ணகியைப் பிரிவுத் துன்பத்திற்கு ஆளாக்கியதிலிருந்து படிப்படியே பல பிரிவுகளை ஊழால் சந்தித்தே இறந்துபடுகிறான். எனவே ஈண்டுத் தெய்வம் என்றது கடவுளையன்று; ஊழேயாகும். அதனால்தான் ஊழைத் தெளிந்து உணரக்கட்டளையிட்டார் இளங்கோ. தெய்வமாயின் தொழுக என்றே கூறியிருப்பார்.

இந்த ஊழ்வினைத் தொடர்ச்சிக்குத் துணையாகவே கவுந்தியடிகளின் பாத்திரப்படைப்பு அமைகிறது. ஊழ்க் கோட்பாட்டை எடுத்துக்காட்டால் உணர்த்தியே கோவலனது மனக் கலக்கத்தைக் கவுந்தி போக்குகிறார் என்பதால்தான் தெளிந்தோரைக் கொண்டு வினையின் தன்மையை உணர்ந்து கொள்ளக் கூறப்பட்டது. மேலும் மதுரையும் மன்னனும் அழிவிற்கும் கோவலனின் பெற்றோர்கள் அழிவிற்கும் ஊழே காரணமென மதுராபுரித் தெய்வமும் மாடலனும் கூறுவதெல்லாமும் ஊழ்வினையைத் தெளிந்தோர்ப்பேணுமின் எனும் நீதிக்குச் சான்றானவரே ஆவர்.

3. புறம் சொல் போற்றுமின்; புறம் பேசல் கூடாது புறங்கூறிப் பொய்த்து உயிர்வாழ்தல் கூடாதென்கிறார் (183) வள்ளுவர். காப்பியப் போக்கில் கவுந்தியுடன் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லுங்கால் மாங்காட்டு மறையவன் சொன்ன இடைப்பட்ட வழியில் சென்றனர். சற்று களைப்பாறிய நிலையில் கோவலன் தண்ணீர் கொணர ஒரு

பொய்கைக்குச் செல்லும் வழியில் வனதேவதை ஒன்று வசந்தமாலைவடிவில் வந்து வழிமறித்துப் பேசும்போது "முன்பு நீர் திருப்பித்தந்த மாதவியின் கடிதத்தை அவளிடம் சேர்ப்பித்தபோது அவள், "கோவலனிடம் என்ன சொன்னாயோ? அவன் என் கடிதத்தை வாங்க மறுத்தான் என்பதால் என் முன் நில்லற்க" என என்னைக் கடிந்து கூறித் துரத்திவிட்டாள்" எனக் கூறியதானது புறங்கூறுதலின் புன்மையை இளங்கோ பதிவு செய்கிறார். ஈண்டு மாதவி கூறாத நிலையிலும் கூறியதாக வனதேவதை கற்பித்துக் கூறுவதுதான் புறங்கூறுதலாகிறது.

இப்புறங்கூறல் உண்மையயன்று எனத் தேர்ந்து தெளிந்த கோவலன் மாங்காட்டு மறையவன் அறிவுறுத்தியபடி வனதேவதை அச்சுறுத்தும் எனக் கேட்டறிந்தானாதலின் தனக்குத் தெரிந்த மந்திர ஆற்றலால் மாற்று வேடமாக வந்த வனதேவதையை விரட்டித் துன்புறுத்தினான்.

4. பொய்யுரை அஞ்சுமின், பொய் கூற அஞ்ச வேண்டும். கதைப் போக்கின்படி ஏழையான வார்த்திகன் என்பவனின் செல்வ வாழ்வைக் கண்ட பாண்டிய நாட்டு அரசுப் பணியாளர் சிலர், அரசுக்குச் சேரவேண்டிய புதையலைத் தாமே வைத்துக் கொண்டதாக அரசனிடம் பொய்கூறித் தண்டனை பெற்றுத் தந்தனர். இந்நிலையில் பாண்டி நாட்டில் ஏற்பட்ட உற்பாதத்தால் உண்மையறிந்து வார்த்திகன் மனைவி கார்த்திகையிடம் மன்னிப்புக் கோரியதுடன் பொய்யுரை சொன்னாரை "அறியா மாக்கள்" என இடித்துரைத்தான் பாண்டியன்.

5. ஊன் ஊண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின், ஊன் உண்ணாமையும் உயிரைக் கொல்லாமையும் சிறந்த நீதிகளாகும். கதைப்போக்கின்படிப் புலால் உண்டலால் வரும் தீங்கினை உணரச் செய்யும் பாங்கு இல்லையாயினும் கனாத்திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய், மாலதியின் கையிலிருந்த பிணத்தைத் தா எனப் பறித்துத் தின்னுதலாகக் காட்டப்பட்ட காட்சியை ஓரளவு ஊன் உண்டலைக் கூடாதெனச் சுட்ட மறைமுகமாக உணரும் உத்தியாகக் கருதலாம்.

மேலும் கோவலனது கொலையை உயிர்க்கொலை செய்ததாகக் கருதலாம். அதாவது கள்வனைக் கொல்லுதல் அறமாயினும் தீரவிசாரிக்காத கோவலனைக் கொன்றது உயிர்க் கொலைக்குச் சமமானது.

6. தானம் செய்மின், கோவலன் பிரிந்தபோது அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பாமையுமாகக் கண்ணகி இருந்ததைக் காட்டுவதும் கோவலன் தன் மகள் மணிமேகலைக்குச் செய்யும் பெயர்சூட்டு விழாவில் தானம் வழங்கிய போது வந்த முதியவரை யானைத் துன்புறுத்தியதாகக் காட்டுவதுமான காட்சிகள் தான் மகிமையை உணர்த்துவதாகும்.

7. தவம் பல செய்மின், கவுந்தியடிகள் தவஆற்றல் உடைய காரணத்தால்தான் கோவலன் கண்ணகியரைப் பழித்துரைத்த வம்பர்களை முதுகாட்டில் நரியாகத் திரியச் செய்ததால் அவரின் தவவலிமை நன்கு விளங்குகிறது.

8. செய்ந்நன்றி கொல்லன்மின்; செய்த நன்றியை மறத்தல் கூடாது. மணம் முடித்து வைத்த பெற்றோரைக் காவாதவனாய்க் கோவலன் இருந்தான். இதனை, "இருமுதுகுரவர் ஏவலும் பிழைத்தேன்" என்றதோடு "குலம் தரும் வான்பொருள் குன்றம் தொலைத்த இலம்பாடு" எனப் பெற்றோர் தந்த பொருளை வீணாக்கிவிட்டதெல்லாம் நன்றிகெட்ட செயலென்று கருதியே கோவலன் சாம்புகின்றான்.

9. தீ நட்பு இகழ்மின்; இடைக்குல மாதரி இல்லத்தில் கண்ணகியோடு உணவு உண்டதும் தன் பழைய தீநட்பை வாழ்வை எண்ணி வருந்திக்கூறுவதாவது தீநட்பு இகழ்மின் என்றதற்கான சான்றாய்க் கருதலாம்.

வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்கு
பொச்சாப் புண்டு பொருள்உரை யாளர்
நச்சுக் கொன்றேன்

என வாய்விட்டுப் புலம்புகிறான். இவை கோவலன் வாழ்ந்த தீநட்புச் சூழலைக் காட்டுவதன் மூலம் அறிவுரை பகரும் இளங்கோவின் கூற்றாகக் கொள்ள வேண்டும்.

10. பொய்க்கரி போகல்மின் : - பொய்சாட்சிக் கூறல் கூடாது. அங்ஙனம் கூறுவோர்க்குப் பரகதி இல்லை என்கிறார் இளங்கோ. பத்தினி ஒருத்தியின் மீது களங்கம் கற்பித்த அவளது கணவனுக்குச் சார்பாகப் பொய்சாட்சி

கூறிய ஒருவனைச் சதுக்கப்பூதம் பிடித்துக் கொண்டதால் அலறிய அவன் தாய்க்கு உதவ முன்வந்த கோவலன் அப்பூதத்துடன் என் உயிர் கொண்டு அவன் உயிரை அவன் தாய்க்கு அளிக்க எனக் கேட்டபோது பூதமானது பொய்க் கரி (சாட்சி) சொன்னவர்க்குப் பரகதி இல்லை எனக் கூறிய கதைப்பாங்கை இப்பொய்க்கரி போகல்மின் என்றதன் சாட்சியாகக் கூறலாம்.

11. பொருள் மொழி நீங்கல்மின்; உறுதிப் பொருள் பயக்கக் கூறும் அறவோர் மொழிக்கு மாற்றாக ஒழுகக் கூடாது. இதற்கான கதைத் தொடர்புண்டு. சேரனின் வடநாட்டு வெற்றியைச் சோழனும் பாண்டியனும் இகழ்ந்தனர் எனக் கேட்டதும் சீற்றம் கொண்ட சேரனை மாடலமறையவன் "அமைக நின் சீற்றம்" என அமைதிப்படுத்தியதும் யாக்கை, வாழ்வு, அரசு, செல்வம், போன்றவற்றின் நிலையாமையைக் கூறிப் போரையே வாழ்வாகக் கொள்ளாமல் புகழுடைய அரசாட்சியைச் செய்யத் தூண்டினான். இதனால் போர் நடப்பது தவிர்ந்தது.

12. அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்; அறவோர்கள் கூடியிருக்கும் அவையை நாடியிருக்க வேண்டும். புகார் நகரத்தே அறவோர் பள்ளியும் அறன் கோட்டமும் இருந்தன. ஆங்கே அறனறிந்து கூறும் நாத்திறம் மிக்க சான்றோர் மக்கட்கு அறிவுரை வழங்கி வந்ததாக இந்திரவிழவூர் எடுத்த காதையில் கூறப்பட்டுள்ளது. ஈண்டு அறவோர் என பொதுப்படக் கூறினாலும் அச்சொல் அருகர் புத்தர் சார்ந்த பள்ளித் தானங்களைக் குறிக்கும்.

சோழநாட்டைப் போலவே பாண்டிய நாட்டிலும் அறவோர்கள் மிகுந்திருந்ததாக அடைக்கலக் காதையின் தொடக்கத்தில் இளங்கோவடிகள், "அறவோர் பல்கிய புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம்" என்கிறார்.

13. பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின் - தீவினையாளர் கூட்டத்தினின்று தப்பித்து வாழ்தல் வேண்டும். இது குறித்த நிலையையே தீ நட்பு இகழ்மின் என்ற நீதியாகக் கூறப்பட்டதாயினும் ஈண்டுத் தீமைக்குக் களமாக இருக்கின்ற, கள், காமம், களவுகளையுடையவர்களோடு சேராது வாழ்தலைக் குறித்தார் இளங்கோ. கல்லாக் களிமகன் ஒருவன்தான் கோவலனைக் கொலை செய்கிறான். பொற்கொல்லன் கூறும் கள்வன் பற்றிய கருத்துக்கள் களவுக்குரிய இலக்கணம் போல் கொலைக்களக் காதையில் கூறப்பட்டுள்ளன.

14. பிறர் மனை அஞ்சுமின் : பிறர் மனை விழையாமை வேண்டும். காப்பியம் முழுமையிலும் பிறர்மனை நோக்கியதற்கான கதைக்கூறு இல்லையெனினும் இந்திரவிழவூர் எடுத்த காதையில் பிறர்மனை நயப்போரைப் பூதம் தண்டிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. சதுக்கப் பூதம் செய்யும் தண்டனைகளிலிருந்து தப்பிக்க முடியாத பல தீவினையாளர்கள் பற்றிய பட்டியல் தரப்பட்டுள்ளது.

தவமறைத் தொழுகும் தன்மை யாளர்
அவமறைத் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளர்என்
கைக்கொள் பாசத்துக் கைப்படுவோர்

என்பதாகச் சதுக்கப்பூதம் கூறுகிறது. இங்ஙனம் கூறுதலில் பிற ஆடவரை விரும்பும் அவலப்பெண்டிர் பற்றியும் கூறுதலால் பிறர் மனை நயத்தல் என்பது ஆண்பெண் இருவர்க்கும் கூடாதென்பதை நீதியாக உணரவேண்டும் என்பது கருத்து.

15. பிழைஉயிர் ஓம்புமின் : துன்புறும் உயிரைக் காக்க வேண்டும். கோவலன் யானையின் பிடியில் சிக்கிய ஒரு முதியவரைக் காத்தான் என்பதை அடைக்கலக் காதை கூறுகிறது. அவ்வாறே கணவனால் கைவிடப்பட்ட பெண்ணையும் மகனையிழந்து வாடிய ஒரு தாயையும் காத்தான். எனவே பிறிதின் நோய் தன் நோய்போல் கருதிய உயிரிரக்கமாகும்.

16. அறமனை காமின் : இல்லறத்தில் நன்மனைவி மக்கள்களைப் பேணுதல் வேண்டும். கோவலன் தன் மனைவி கண்ணகியிடம் போற்றா ஒழுக்கம் செய்த புன்மையைக் கூறி வருந்துகிறான். எனவே இயல்பினால் இல்வாழ்க்கை வாழ வேண்டுவது இல்லறத்தான் கடமையாம் என்க!

17. அல்லவை கடிமின்; இல்லறமல்லாத தீயறமாகப் பரத்தையர் வாழ்வை நாடற்க என்கிறார் இளங்கோ! பிறர் மனை நயவாததை இல்லறக் கடிவாளமாகக் கூறினாலும் வரைவின் மகளிராம் பரத்தமை ஒழுக்கம் கூடாதெனச் சவுக்கடி தருதலுக்காகவே "கடிமின்" என்று நீதி உணர்த்தப்பட்டது.

சிலப்பதிகாரக் கதைப் பாங்கில் பிறன்மனை விழைந்ததற்கோ பரத்தமைக்கோ உரிய கதைப்பாங்கு இல்லையெனினும் சமூக தளத்தில் அவைகள் இருந்த உண்மையைக் கதாபாத்திர வாயிலாக மொழிய

வைத்த பாங்கில் குறிப்பாக அவைகள் தனிமனித வாழ்விற்கான எச்சரிக்கைகளாக உணர்த்தப்பட்டன எனலாம்.

நீதிகள் கூறி முடிக்கும் தறுவாயில் நிலையாமையே நிலைத்ததாகிய மனித வாழ்வில் வளமாக வாழவேண்டுமெனில் நல்ல நீதிகளைக் கடைப்பிடியுங்கள் என்பதை இளங்கோவடிகள் “மின்” என்ற ஏவல் வினைமுற்றுச் சொல்லால் அறிவுறுத்தியது சிறப்பாகும். வாழ்க்கை மின்னல் போலத் தோன்றி மறைவதாயினும் மின்மினிப் பூச்சி மின்னும் போதுதான் ஒளி விடும் என்பதால் மின்ஒளியைத் “தேடுமின்” என நீதிக்குள் சிலம்பை ஒலி ஒளி காட்சியாக்கினார் இளங்கோ!



பரந்து விரிந்த நமது நாட்டில் வாழும் நமக்கு இயற்கை வளங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. கூடவே இளைஞர்களின் மனிதவள ஆற்றலும் அதிகமாகவே உள்ளன. இவர்களது எண்ணங்களை நாட்டின் மேம்பாட்டிற்கென்று பயன்படுத்திக் கொள்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளில் அவர்களது கவனம் செல்லாமல் இருகக நாம பாாததுக கொள்ள வேண்டும். இதனால் மேம்பாட்டு பணிகளுக்கு கூடுதல் முக்கியத்துவமும் கவனமும் அளிக்க இயலும். தேவையற்ற பிரச்சினைகளில் தங்களது சக்தியையும் மனதையும் பறிகொடுப்பதை தவிர்க்கலாம்.

நாட்டின் மேம்பாட்டிற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைத்து அரசின் தலைவர்களையும் மத தலைவர்களையும் மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துபவர்களையும் இந்த நாட்டு குடிமக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றிலிருந்து வளர்ந்த நாடாக இந்தியாவை உருவாக்க உறுதி கூறுவோமாக. இதன் மூலம் அடுத்த தலைமுறையினருக்கு பெருமைக்குரிய மரபை நாம் விட்டுச் செல்லக்கூடும். இன்று நாம் இந்த தியாகத்தை செய்தால் நாளை நமது குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலம் உருவாகும்.

– அப்துல் கலாம்

திருத்தம் :

சென்ற இதழ் அட்டையில் உள்ளதை வைகாசி – ஆடி என்று திருத்திப் படிக்கவும். – ஆசிரியர்

“மக்கள் சிந்தனை”யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

இனியாவது ஒருவிதி செய்வோம்!

(பாரதிவீரமுத்து, குன்றக்குடி)

இந்தியாவின்
இதயமே!
இல்லை! இல்லை! - உந்தன்
இதயமே இந்தியா!
அதனால்தான் என்னவோ?
நாட்டையே நேசித்த - நீ
நாடாகவே ஆகிப்போனாய் -
ஆம்!
இந்தியரவின்;
தென்கோடியில்
பிறந்த நீ!
இந்தியாவின்
வடகோடியான
ஷில்லாங்கில்
மறைந்தாய் என்றால்?
இந்தியாவை உன்னுள்
அடக்கிக்கொண்டாயா?
- இல்லை
இந்தியா உன்னை
அடக்கிக் கொண்டதா?

கனவு காணச் சொன்னாய்;
தூக்கத்தில் அல்ல;
தூக்கத்தை விரட்டும்
ஊக்கத்திற்காக;
கனவு காணச் சொன்னாய்!
கைம்மாறு கருதாத - அந்த
கார்மேகத்திற்கு;
இந்திய இளைஞனே;
ஒரு கைம்மாறு செய்!
உன்னையே நம்பி
2020 - இல்
"இந்தியா வல்லரசு" - என்ற
வாசகத்தைத்
திக்கெட்டும் உச்சரித்த
தியாகதீபம்...

மரணப் பொழுதின்
கடைசி நேரத்தில்
மரணம் வரப்போவதை
அறியாத அந்த மாமேதை!
உரக்கச் சிந்தித்த
உன்னதத் தலைப்பு;
"வாழ்வதற்கு உகந்த பூமி"
சிந்தித்த மனம் - அந்த
மரணப் பொழுதின்
கடைசி நேரத்தில்
கண்கலங்கியதாம் - ஆம்
பஞ்சாப் சம்பவத்தை
நெஞ்சினுள் பதித்தவாறு;
மனிதர்களால் ஆன - அந்த
மாபாதகச் சக்திகள்...
மனிதனை 2030 - இல்
புவியில் வாழவிடாமல்

புதைந்துவிடுமோ? - என்று
குழந்தை மனம்
குமுறியதாம் - ஆம்

இந்திய இளைஞனே!
உன்னையே நேசித்து
உன்னுள்ளே அடங்கிப்போன;
துவராடை
உடுத்தாத
தூய்மைத் துறவிக்காய்;
இனியாவது
ஒருவிதி செய்வோம்!

புவியை நடத்து,
பொதுவில் நடத்து!
எண்ணத்தை வலிமையாக்கு;
சிந்தனையை
செம்மையாக்கு - அப்போது
இந்திய தேசம்
இளைப்பாறும்;
"அப்துல் கலாம்" என்னும்
அன்பே வடிவான
அரியணையில்!

(இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் 27.07.2015 ஆம் நாள் மேகாலயாவில் உள்ள ஷில்லாங்கில் மறைந்தபோது எழுதிய இரங்கல் கவிதை.)

அப்துல்கலாமின் 10 கட்டளைகள்



1. *தகுதிமிக்க மாணவ மாணவிகளுக்கு அவர்களின் சமுதாய, பொருளாதாரப் பின்னணியைப் பார்க்காமல் நெறி சார்ந்த கல்வியை வழங்கும் நாடு.*
2. *தலைசிறந்த அறிஞர்கள், அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், முதலீட்டாளர்களுக்கான நாடு.*
3. *ஊர்ப்புற, நகர்ப்புற இடைவெளி குறைவாக உள்ள நாடு.*
4. *வேளாண்மை, தொழில்துறை, சேவைத்துறை ஆகியவை ஒன்றிணைந்து இணக்கத்துடன் செயல்படும் நாடு.*
5. *சமமான மின் பகிர்வு, எரிசக்தியையும் தரமான நீரையும் தேவையான அளவு கொண்டுள்ள நாடு.*
6. *அனைவருக்கும் மிகச்சிறந்த மருத்துவ வசதி அளிக்கும் நாடு.*
7. *பொறுப்பான வெளிப்படையான ஊழலின்றி ஆட்சி புரியும் நாடு.*
8. *வறுமை, எழுத்தறிவின்மை, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஒழிக்கப்பட்ட நாடு.*
9. *வளமான நல்வாழ்வு கொண்ட பாதுகாப்பான, அமைதியான, மகிழ்ச்சியான, நிலையான வளர்ச்சிப் பாதையில் செல்லும் நாடு.*
10. *வாழ்வதற்குச் சிறந்த இடங்களையும் பெருமைக்குரிய தலைமையையும் கொண்ட நாடு.*

நம்பி – பிள்ளை – பெருமாள் – முதலி சொல் ஆய்வு

(திருமையாதீனப் புலவர். த. குருசாமிதேசிகர்)

நம்பி

நம்பியாரூரர் – திருக்கச்சிநம்பி – நம்பியாண்டார் நம்பி – முதலிய பெயர்களில் "நம்பி" என்ற சொல் பற்றிய சிந்தனை வட்டம் நிகழ்ந்தபோது, அமரர்.மு. அருணாசலம் இவைபற்றி ஆய்ந்த செய்திகள் வட்டத்தில் சிந்திக்கப்பட்டன. அவரது முடிவே முடிவாக முடிந்த செய்திகளின் தொகுப்பு இவை.

ஆடவருள் சிறந்தவனை "நம்பி" என்றல் இலக்கிய மரபு, புறநானூறு (239) பாடலில், நம்பி நெடுஞ்செழியன் என்ற சொல்லாட்சி உள்ளது. சிலம்பிலும் "நம்பியார்" என்ற சொல் வருகிறது. அதற்கு அடியார்க்கு நல்லார் "காதலஞ்செல்வர்" என்று உரை கூறுவார்.

"நம்பி பிறந்தான் பொலிக" என்பது கம்பராமாயணம். "நம்பியும் என், நாயகனை ஒக்கின்றான்" என்று கம்பர் பரதனைக் குறித்துக் குகன் கூறுவதாக அமைத்துள்ளார். அகப்பொருள் விளக்கம் செய்தவர். "நாற்கவிராசநம்பி" எனப்படுவார்.

வைணவ ஆசாரியார் பலர் "நம்பி" என்ற அழைக்கின்ற பாங்கு உள்ளது. திருக்கோட்டியூர் நம்பி – முதலிய பல ஆசாரியர்கள் இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளனர்.

நம்பியாண்டார் நம்பி – நம்பியாரூரர் – முதலிய சைவ ஆசாரியர் பெயர்களிலும் "நம்பி" இடம் பெறுகின்றன.

"நன்றே நம்பி குடிவாழ்க்கை நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா" – என்று பரம் பொருளை, வேறு எந்த அடையுமில்லாமல் "நம்பி" என்றே கம்பர் கூறுவார்.

"நம்பி மூத்தபிரான்" என்பது பலராமனுக்கு இலக்கியம் தரும் வார்த்தையாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், "நம்பி" என்று முடிவுடைய சொல்லை வைத்தே, ஒருபதிகம் அருளிச் செய்துள்ளார்.

அப்பதிகம் படித்து இன்புறுதற்கு உரியது.

"நம்பும் மேவும் நாசமாகும்மே" என்பது தொல்காப்பிய விளக்கம். கேரள நாட்டில் "நம்பியார்" என்பது சாதிப்பெயராகவும் உள்ளது.

பிள்ளை :

"பிள்ளை" என்ற சொல் இளமைப் பருவத்துக்கு உரிய பெயராக உள்ளது. இச்சொல் இருபாலருக்கும் பொதுவாக உள்ளது. பிள்ளைத்தமிழ் என்றபோது இருபாற்கும் பொதுவாகவே உள்ளது.

வேளாளர், காஞ்சியில் உமாதேவியார் செய்த 32 அறங்களையும் வளர்க்கும்படி தேவியாரால் அமர்த்தப்பட்டவர்கள்.

ஆகவே இவர்கள் உமாதேவியின் பிள்ளைகள். அதனால் இவர்கள் பட்டம்பிள்ளை என்பதாயிற்று என்பது கன்னபரம்பரை வழக்கு.

"பிள்ளான்" என்பது ஆசாரியனுக்குரிய பெயராக வைணவத்தில் வழங்குகிறது. வைணவத்தில் பிள்ளைப் பட்டம் வகித்தவர்கள் பலர் உண்டு. நம்பிள்ளை – பெரியவாச்சான் பிள்ளை – முதலியன, "ஆளெறிபிள்ளை" – என்பது புறப்பொருள் வெண்பாமாலையில் ஒப்பற்ற வீரன்" என்ற பொருளில் "பிள்ளை" வழங்குகிறது.

வேளாளர் – நாடார் – பலர்க்கும் பிள்ளை என்றே வழங்குகிறது. சோழிய வேளாளர் – பாண்டிய வேளாளர் – பலருக்கும் "பிள்ளை" என்றே வழங்குகிறது. சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர் பலரும் பிள்ளை என்றே அழைக்கப்படுகின்றார்.

திருஞான சம்பந்தரும் "ஆளுடையபிள்ளை" என்று வழங்குகிறார்.

கார்காத்த வேளாளர் – சைவப்பிள்ளைமார் பலர் ஒப்பற்ற உழவுத் தொழிலைப் பெரும்பாலும் போற்றியதால் பிள்ளைப் பட்டத்தைப் பெற்றார்.

"வேளாளர் என்பவர்கள்வள்ளன்மையால் மிக்கிருக்கும் தாளாளர்" என்று தேவாரத்தில் சம்பந்தர் அருளுவார். நாதசுரக்கலை, வல்லவரும் பிள்ளை என்றே அழைக்கப்படுகின்றனர்.

ஆதலால் பிள்ளை என்ற சொல் சங்க காலத்திற்குப் பின்பு "ஒப்பற்ற ஆள்" என்ற பொருளில் பிற்கால வழக்கில் வந்தது என்பதும், இதனை வைணவ நெறி போற்றியது என்பதும் விளக்கம்.

பெருமாள் :

பெரும் + ஆள் : பெருமாள். "புகழ் பெற்றவன்" என்பது மட்டும் பொருள். இன்று பாண்பெருமாள் - சேரமான் பெருமாள் என்ற வழக்கைக் கொண்டு இதன் பொருளை அறியலாம்.

சேரமன்னருக்கு இப்பெயர் குலசேகரப் பெருமாள் என்ற வழக்கால் இதனை அறியமுடியும். புருடோத்துமன் என்ற பெயருக்கு நேரானது என்பர் பெருமாளை.

இச்சொல்லை அருணகிரிநாதர் முருகனைப் "பெருமான்" என்றே அடையாளப்படுத்துகிறார்.

பெருமாள் கோயில் என்றால் இன்று திருமால் கோயிலையே சுட்டிவருகிறது.

சிவபெருமான் என்ற வழக்குப் "படிப்படியாக" வைணவம் பெருமாளைப் போற்றிக்கொண்டது.

பெருமைக்குரிய பெருமாள் என்பதைச் சிவபிரானுக்குரியது ஆக்குவார் ஆளுடைய பிள்ளை.

"பெருமையே சரணாக வாழ்வீர்காள் - இறையேபேசுமின்
கண்டியூர் பெருமானை" என்பது தேவாரம்.

"பெருமை" என்ற செர்ல்லின் அடியில் பிறந்த இச்சொல்லுக்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் உணரத்தக்கது.

"பெருமை - செயற்கரிய செய்தல், தருக்கு இன்மை;
பிறர் குற்றங் கூறாமை முதலிய நற்குணங்களால்
பெரியாரது தன்மை" என்ற விளக்கம் படிப்படியாக பரிணாமமுற்று "கடவுளுக்கு ஆயிற்று" என்று கருதலாம்.

முதலி :

"முதலியார்" என்ற வழக்கு சைவவேளாளரில் ஒரு பிரிவு. மற்றொன்று செங்குந்த மரபிலும் இச்சொல் வழங்கும். சோழர் காலத்தில் பெரிய அந்தஸ்து "முதலி" என்பது. முதன்மை வகித்த காரணத்தால் முதலியார் எனப்பட்டார். இலங்கையில் இச்சொல் கௌரவப்பட்டமாக வழங்குகிறது.

தில்லை உலாவில், இறைவனையே "முதலியார்" என்று வழங்குகிறது.

"முன்நின்றமரரெல்லாம் சேவிப்ப முதலியார்
பொன்னின் திருத்தேர் மேல்போதலும்" என்ற வரிகளாலும், கண்ணப்பரின், "எங்கள் பெருமுதலியங்கயோ" என்ற கூற்றாலும்,

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்" என்ற இரட்டையர் கூற்றாலும், தலைவர், ஆசாரியர், அடியவர், என்ற பொருளிலும் "முதலி" வருவதை உணரலாம். வைணவ மரபில் "பிள்ளை" ஆசாரிய மரபையும், "முதலி" அடியவரையும் குறிப்பிடும் என்பர்.

"போற்றி என்வாழ் முதலே" என்ற மணிவாசகர் வாக்குப் போல, சம்பந்தர் அப்பர், சுந்தரர், வாக்குகளிலும், சிவன் "முதல்வன்" என அழைக்கப்பட்டான்.

அதிகாரத்தில் நின்றவர் "முதலியார்" எனவும், போரில் முதன்மையாக நின்ற செங்குந்த மரபினர், மானங்காக்கும் ஆடை நெய்தல் தொழிலிலும் முதன்மை வகித்ததால் முதலியார் எனப்பட்டனர்.

இவ்வாறு நம் தமிழ்ச் சொற்களின் பொருளறிந்து - சிவநெறிபேண திருவருள் கூட்டுவதாக!

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்

அறிவியல் ஆதவன் அடக்கம்

(தமிழாகரர் தெ. முருகசாமி)



1. இளைஞரின் ஈர்ப்புச் சக்தி!
இந்தியவிஞ் ஞா ன வீறு
இளைஞரெனும் பட்டா ளத்தின்
இளம்போத்து, அறிவியல் சிங்கம்!
இளைஞரை நாளும் நாளும்
இளஞ்சிவப்புச் சூரிய னாக
இளைக்காமல் சுற்றி வந்த
இருஞ்சுடர் அடங்கிற் றம்மா!

2. கலாமெனும் வார்த்தைக் கேநாம்
காலமெலாம் வாஞ்சை யோடே
சலாம்போடும் படியாய் வாழ்ந்து
சாதனைகள் புரிந்த வீரர்!
முலாம்பூசிப் பளபளக் காமல்
மூத்திட்ட அறிவியல் தங்க
முலாம்பழந்தான் பழுத்து திர்ந்தே
மூச்சடங்கிப் போயிற் றம்மா!

3. பலாச்சுவை பக்குவ மாகப்
பாரதவிஞ் ஞானத் தைத்தான்
அலாதியாய்த் தனித்து நின்றே
ஆருமே அறிய; அறிவியல்
கலாநிதி யாக அன்று
காட்டிய பொக்ரான் வெடிப்பால்
உலாப்புகழ் பெற்ற தாலே
ஊரெலாம் போற்று தம்மா!

4. பிறந்தமண் இராமே சுரத்தைப்
பிறரெல்லாம் நினைக்கச் செய்தார்!
சிறந்ததன் சாதனை யாலே
சிங்கார பார தத்தை,
அறம்பொருள் இன்ப மான
அரியதிருக் குறளை, என்றும்
மறந்திடா மனித ராக
மதிப்புயரச் செய்தா ரம்மா!


5. மறைந்தாலும் மரண மில்லா
மாபெரும் வாழ்வைப் பெற்றார்!
இறந்தாலும் இருப்ப தைப்போல்
ஈர்ப்புடை முகச்சி ரிப்பின்
திறன்தானே தெரிய, அன்னார்
தீரராய் இல்ல றத்தைத்
துறந்திட்ட தூய வாழ்வே
தூய்மையாம் தூய்மை யன்றோ!

6. அக்கினிப் பொறியியல் தாயாய்
அன்றாடம் கருவுயுர்த் தாலும்
அக்கினி அறிவியல் குஞ்சாய்
அடைகாத்து இளைஞர் தம்மை
அக்கினிப் பிழம்பாய் நாளும்
அலைந்திடவே செய்த கலாம்தான்
அக்கினிச் சிறகொ டிந்தே
அடங்கிற்றார் மண்ணுக் குள்ளே!

7. பேசியே காலம் போக்கும்
பேதமை இல்லா மேதை!
பேசிடும் போதே அந்தோ
பேச்சூழச் சடங்கி விட்டார்!
பேசிய அறிவியல் பேச்சைப்
பேறாகக் கேட்டோ ரெல்லாம்
பேசிடா மனித ராகிப்
பேதலித்து மயங்கி னாரே!

8. மாதிரிக் கிராமம் என்றே
மதித்திடும் குன்றக் குடிபோல்
மாதிரி மனித ராக
மன்னுபுகழ் இளைஞர்க் கெல்லாம்
மாதிரிச் சுடர்வி ளக்காய்
மின்னிடும் விஞ்ஞா னத்தின்
மாதிரி வடிவாய் வாழ்ந்தார்!
மறவாமல் போற்று வோமே!

உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமுக்கு மலரஞ்சலி!



உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் சார்பில் பாட்டுக்கொரு புலவன் பாரதியின் விடுதலைச் சிந்தனையில் எனும் பொதுத் தலைப்பில் மொழி, நாடு, சமுதாயம் குறித்தக் கருத்தரங்கம் சி.எம். மேல்நிலைப்பள்ளியில் கருவூலத்துறை இணை இயக்குநர் கணேசன் தலைமையில், கவிஞர் இன்பவாணன் முன்னிலையில் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவை, துணைத் தலைவர் பேராசிரியர் சவகர்லால் வரவேற்றுப் பேசினார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பார்வையில் எனும் பொதுத் தலைப்பில் உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் திருக்குறள் அன்பழகன் மொழிபற்றியும், ஆசிரியர் பொன். தேவிகா நாடு குறித்தும், ஆசிரியர் சுந்தரி சமுதாயச் சிந்தனைக் குறித்தும் உரையாற்றினார்கள்.

பேராசிரியர் குமரிக்கண்ணன் நன்றி கூறினார். கருத்தரங்கில் அறிவுச் செல்வம், செய்யது முகம்மது செரீப், அண்ணாமலை, வளர்மதி, தனபால் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் 11ஆவது முன்னாள் குடியரசுத் தலைவர் அணுவிஞ்ஞானி அப்துல்கலாம் அவர்களின் மறைவிற்கு இதயப்பூர்வமான மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நல்லதைச் சொல்வோம்

(கவிஞர். கா. கருப்பையா B.A., மேனாள் துணை ஆட்சியர்)

இரவும் பகலும் இருளும் ஒளியும், கடலும் வானமும் இயற்கை தந்த நியதி. மேடும் பள்ளமும், உயர்வும் தாழ்வும், நன்மையும் தீமையும், இன்பமும் துன்பமும், வறுமையும் வளமையும் நம்மால் உருவாகும் நியதி. இந்தச் சூழலில் மனித வாழ்க்கை குரங்கிலிருந்து மாறி மலை மடுவுகளில், ஆடையின்றி அலைந்து திரிந்த மனித இனம். கனிகளையும் காய்களையும், இலை தழைகளையும் தின்று வளர்ந்து, இனப்பெருக்கம் செய்து குடும்பமாகி, ஒன்றுகூடி சமூகமாகச் சேர்ந்து வாழ்ந்து, பல ஆயிரம் ஆண்டுகட்குப்பின் இன்றைய வாழ்க்கை நிலையை அடைந்துள்ளது மனித சமுதாயம்.

அந்த சமுதாயம் எப்படி வாழவேண்டும் – வாழ்க்கை முறைகளை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நியதிகளை அறிவுறுத்தும் பொதுமறைகளில் திருக்குறள் முதன்மையானது. சாதி மத பேதமற்ற, எல்லா சமயங்களும், எல்லா மதங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான நியதிகளை எளிமையாகவும் துல்லியமாகவும் எடுத்து இயம்புகின்ற முக்கால இலக்கியம். உலக அறிஞர்களால் போற்றப்பட்ட பாராட்டப்பட்ட உலகப்பொதுமறை. அந்தப் பொதுமறை எடுத்துக்கூறும் நியதிகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதுதான் வாழ்க்கையின் நோக்கம். வாழ்க்கை என்பதே நெருக்கடிகளின் தொகுப்புதான். பல தடைகளைத் தகர்த்தெறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ ஒவ்வொரு மனிதனுக்கும் முயற்சியும், ஊக்கமும், தன்னம்பிக்கையும் தேவை. கடந்தகால கசப்பான அனுபவங்களிலிருந்தோ எதிர்கால சிந்தனைக் கனவுகளிலிருந்தோ மட்டும் ஊக்கம் பிறப்பதில்லை. நிகழ்கால நொடிப்பொழுதுகளை முழுமையாக எதிர்கொள்ள நமது இரண்டு கைகளையும் உற்சாகத்தோடு, உயர்த்தும்போதுதான் நமக்குள் ஊக்கம் பிறக்கும். காலங்கருதிக் கலங்காது இருப்பவர் ஞாலத்தை வெல்ல எண்ணும்போதுதான் ஊக்கம் உருவாகும்.

"அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்" (611)

"உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதிலார்
உடையது உடையரோ மற்று" (591)

என்ற குறட்பாக்களும், "ஊக்கமது கைவிடேல்" என்று ஔவையாரும் கூறியுள்ளது வாழ்க்கைக்கு ஊக்கம் எவ்வளவு முக்கியம் என்பதையும், அது எவ்வாறு "எண்ணிய எண்ணியாங்கு எய்த உதவுகிறது என்பதையும், நமது உள்ளத்தனையது உயர்வு என்பதையும் வெளிப்படுத்துகிறது. தெளிவாக்குகிறது.

வாழ்க்கை என்பது காலத்தைக் கடத்துவதில் மட்டும் இல்லை. வாழ்க்கையை ஒவ்வொரு கணமும் வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

என்பார் திருவள்ளுவர் – இங்கு முயல்வார் யார்? ஊக்கமுடையவரே – எல்லாவற்றிற்கும் பிறரைச் சார்ந்து நிற்காமல் தன்முயற்சியின் மூலமாக எதையும் சாதிக்க முடியும் என்கிற தன்னம்பிக்கைதான் வாழ்க்கையின் ஆதாரம். நம்முடைய நம்பிக்கைகள் முழுமையானதாக இருக்க வேண்டும். அரைகுறை நம்பிக்கை ஆபத்தானது.

"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்" (510)

என்ற குறள்நெறி முழுநம்பிக்கையை விளக்குகிறது. கம்பராமாயணத்தில் இராமன் பெயரை அனுமன் நம்பிய அளவுக்கு சுக்ரீவன் நம்பவில்லை. அதனால்தான் அனுமன் பெற்ற நிலையை சுக்ரீவனால் பக்தி உலகில் அடைய முடியவில்லை. ஊக்கமும் தன்னம்பிக்கையும் வாழ்க்கையின் உயர் நிலையை அடைய உதவும் கருவிகள் என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் உணர வேண்டும்.

அதுபோல எந்த ஒரு புதிய செயலைத் தொடங்கும் பொழுதும் நம்மனதில் தேவையில்லாத பயம் பரவுகிறது. அதற்குக் காரணம் நமது கடமைகளையும், பொறுப்புகளையும் தட்டிக்கழிப்பது. செய்யப்போகிற காரியத்தில் தெளிவில்லாத குழப்பநிலை. காரியத்தில் குறுக்கேவரும் சில

இடர்ப்பாடுகள். இவையாவும் மொத்தமாய் ஒன்று சேர்ந்து நம் முன்னேற்றத்தைத் தடைசெய்து விடுகிறது. அச்சமயம் நமது நாடியைத் தளர்த்திவிடுகிறது. உள்ளம் திடமாகவும் எண்ணம் தெளிவாகவுமிருந்தால்

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

என்று தேசியகவி பாரதி பாடியுள்ளாரே, அந்த தைரியம் இன்றைய இளையதலைமுறைக்கு வந்து விட்டால்- எதையும் வெற்றிகரமாகச் சாதிக்கும் தைரியம் தானாகவே வந்துவிடும்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" (669)

என்ற குறள் துணிவோடு இன்பம் தரும் காரியத்தைச் செய்ய வலியுறுத்துகிறது. உங்களைச் சுற்றி எப்படிப்பட்ட இருள் படர்ந்திருந்தாலும் எல்லா பயங்களிலிருந்தும் விடுவித்துக்கொள்ள ஊக்கம், தன்னம்பிக்கை, விடா முயற்சி, அச்சமின்மை ஆகியவற்றை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்" (619)

என்பது 2000 ஆண்டுகட்கு முன்பே சொல்லி வைக்கப்பட்ட நெறி. எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்தாலும், எவ்வளவு துயரங்களும் துன்பங்களும் தொடர்ந்து வந்தாலும் என்றாவது ஒருநாள் வெளிச்சத்திற்கு வந்து வெற்றிக்கனியைப் பறிக்க முடியும் என்ற நம்பிக்கையை இன்றைய இளைய சமுதாயத்திற்கு உருவாக்க வேண்டும்.

குறள் நெறியால், குறுகிப்போன மனித நேயம் வளரட்டும். விலகிப்போன நற்குணங்கள் ஒன்று சேரட்டும். அச்சம் அதிரடியாக அழியட்டும். தன்னம்பிக்கை வேரூன்றி வளரட்டும். முயற்சியும் தன்முனைப்பும் முன்னேறி வரட்டும். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் – வெற்றி நிச்சயம்

நல்லதைச் சொல்வோம்
உள்ளதைச் சொல்வோம்
உண்மையை உணர்ந்து
உயர்வினைப் பெறட்டும்.

கயிலை மாமணி நீடூழி வாழ்க!

(கவிச்சுடர் **அழுகுதாசன்** கோவை - 24)

தவத்திரு பேரூரடிகளார் அவர்களின் 91ஆம் நாண்மங்கலம்
9-10-2015 புரட்டாசி - மகம்.

சிவப்பெரும் பேரூர்த் தவப்பெரும் சீலர்
சீர்வளர் ஞானியன்றோ - அடிகளார்
அருள்தரும் கோவிலன்றோ!
உவப்பெனும் நம்மொழி உலகினில் செம்மொழி
உயிரெனக் காத்தவராம் - தாய்மொழி
உலகெலாம் சேர்த்தவராம்!

அருள்நெறி பரப்பித் தமிழ்நெறி காத்த
தத்துவப் பேரொளியாம் - தமிழ்ச்
சித்தருள் பேருருவாம்!
திருவரு ளோடு அருள்மனம் கொண்ட
செந்தமிழ் நாவலராம்- சாந்தலிங்கர்
தாண்மலர் போதகராம்!

சங்கத் தமிழ்நெறி வதுவை நடாத்திச்
சாதனை புரிந்தவராம் - தமிழை
வேதமாய்ப் படைத்தவராம்!
எங்கும் தமிழ்மொழி எதிலும் தமிழ்மொழி
என்றே ஈடுபட்டார் - முதுமுனைவர்
நன்றே பாடுபட்டார்!

கோவில் தோறும் திருக்குட நீரால்
தீந்தமிழ் பாடவைத்தார் - தெய்வநெறி
திக்கெலாம் பேசவைத்தார்!
ஆவலாய்க் கட்டிடும் புதுமனை தோறும்
அருந்தமிழ் பொழியவைத்தார் - தாய்த்தமிழ்
ஊரெலாம் வளரவைத்தார்!

பேரூர் அடிகளார் கயிலை மாமணி
எங்கள் குருமணியே - கோவைத்
தங்கத் தவமுனியே!
பெருமை மிக்கதோர் கொங்குச் சிவமணி
நீடூழி வாழ்க என்றும் - அம்பலத்தான்
இணையடி வேண்டுவமே!

திருவாசகம் காட்டும் "நெஞ்சே துணை"

(டி. ஆர். குருமூர்த்தி)

தனி மனிதனது வாழ்வும் வாக்கும் அவனது நெஞ்சில் குடிகொண்டிருக்கும் நற்பண்புகளையும், நல்ல எண்ணங்களையும் பொறுத்து அமையும். ஒருவரது வாழ்வினையும், தாழ்வினையும் அவரது நெஞ்சமே நிர்ணயிக்கின்றது. வையத்துள் வாழ்வாங்கு வாழ நல்லெண்ணங்கள் சூழ்ந்திருக்கும் நன்னெஞ்சம் துணை நிற்கின்றது. பரமனது நெஞ்சத்திலே அவன் மலரடி தொழுது வணங்குவோர் அனைவருக்கும் இடமுண்டு. அந்த இடத்தைப் பெற்றுக் கொள்வதற்கேற்ப இறையருள் பெற வேண்டும். இறைவனது தாள்நிலையிலேயே நீங்காது தங்க அருள்பெற வேண்டும். அதற்குரிய நெஞ்சம் தருக என இறைவனிடம் இறைஞ்சுதல் வேண்டும். நற்பண்புகள் சூழ்ந்த நெஞ்சத்துடையார் இறந்தும் வாழ்வார். "ஊன்ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே" என மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை வாழ்வன்று. நல்நெஞ்சாரும் வாழ்வே வாழ்வாகும்.

திருமூலர் தமது திருமந்திரம்

"பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே"

என்று பேசும். நல்வினை அல்வினைகளைச் செய்த உடம்பு பழசாகி வீழ்கின்றபோது, அவ்வுடம்பால் பயன்பெற்ற பெண்டிரும் மக்களும் அவ்வுடம்போடு பின்செல்லமாட்டார்கள். ஒருவர் தன் நெஞ்சகத்திலே கொண்ட விரதமும் ஞானமும் மட்டுமே அவர் இறந்தும் பின் செல்லும். நன்நெஞ்சம் கொண்டவர் இறவாப் புகழைப் பெறுகின்றார்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்".

பொருள்களின் மீதான ஆசை ஒருவருக்குத் துன்பம் தருகின்றது. எந்தெந்தப் பொருள்களின் மீது ஒருவன் ஆசை கொள்வதிலிருந்து

விடுபடுகின்றானோ, அந்தந்தப் பொருட்களால் அவனுக்குத் துன்பம் வருவதில்லை. தேவையற்ற பொருட்களின் மீதான ஆசையைத் துறக்கும் நெஞ்சம் வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

உலகப் பற்றிலிருந்து விடுபடுவதற்கு, பற்றற்ற இறைவனைப் பற்றுக என திருவள்ளுவர் கூறுகின்றார். பற்றற்றானைப் பற்றும் நெஞ்சம் நம் உடலில் தங்குவது அவசியமாகிறது. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" எனத் திருமூலர் அருளியுள்ளார். உடம்பெனும் ஆலயத்தில் நெஞ்சம் என்பது கருவறை. இறைவன் குடிகொள்ளும் இடம். நெஞ்சகத்தின் எச்சமே வாழ்வின் உச்சம் என்பதை மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"அறிவிலாத எனைப்புகுந் தாண்டுகொண்டு அறிவதை அருளிமேல்
நெறியெலாம் புலமாக்கிய எந்தையைப் பந்தனை அறுப்பானைப்
பிறிவிலாத இன்னருள்கள் பெற்றிருந்தும் மாறாடுதி பிணநெஞ்சே
கிறியெலாம் மிகக்கீழ்ப்படுத்தாய் கெடுத்தாய் என்னைக் கெடுமாறே".

அறிவிலாத என்னுள் புகுந்து அறிய வேண்டியதெல்லாம் அறிய அருள் செய்தான். மேல் நெறியாகிய தெய்வநெறிகளையெல்லாம் எனக்களித்தான் இறைவன். பிறிவில்லாத இன்னருள்கள் எல்லாம் நான் பெறுவதற்கு எந்தை அருளிச் செய்தான். எந்தை அருளிச் செய்த பிறிவில்லாத இன்னருள்களைப் பெற்றிருந்தும், நெஞ்சே தடுமாறுகிறாயே. சவம் போன்ற பயனற்ற மனமே! பொய்களை மிகக்கொண்டு என்னைத் தாழ்த்திவிடாதே. இறைவனை விட்டுப் பிரியக்கூடாது என்கிற என் எண்ணத்தைக் கெடுத்து விடாதே. நானும் கெடுமாறு நடந்து கொள்ளாதே என மாணிக்கவாசகர் வேண்டுகின்றார்.

எத்துணைச் சிறப்புகள் பெற்றிருந்தாலும் நெஞ்சம் தூய்மையாக இல்லையெனில், நெஞ்சம் துணை செய்யவில்லை எனில், சிறப்புகளின் பயன் மனிதனுக்குக் கிட்டாமல் போய்விடும். இனிய வாழ்வும் இறையருளும் பெற, நெஞ்சமே துணை என மாணிக்கவாசகர் தெரிவிக்கின்றார். தேவதேவன் அருளிய ஞானம், நெறி, இன்னருள்கள்.

அனைத்தும் பெற்றிருக்கிறேன். என் நெஞ்சே தடுமாறி விடாதே. எம்பிரானின் மலரடி என்றைக்கும் தொழுது நிற்க உதவிட வேண்டும் என மாணிக்கவாசகர் வேண்டுகின்றார்.

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வதொன்று அறியேனே".

நமது நெஞ்சம் நல்வினைகளுக்குத் துணையாக இருக்க வேண்டும். குறிப்பாக இறையருள் பாதையில் நடந்து செல்லத் துணை நிற்க வேண்டும். அவ்வாறில்லையெனில் நமது நெஞ்சம் பிணநெஞ்சமாகக் கருதப்படும். நெஞ்சம் துணையாக இல்லாததன் காரணமாக, இறைவனின் திருவருள் நினைத்து ஆட இயலவில்லை. சிவபெருமான் கழல்கள் மீது அன்பு செலுத்த இயலவில்லை. உடல் எலும்பு, உருகப் பாடல் இல்லை, இறைவனை நினைத்துப் பதைப்பதும் இல்லை, பணிவும் இல்லை, இறைவனின் பாதமலர் சேர்வதுமில்லை, பாதமலரில் மலர்களைச் சேர்ப்பதில்லை, இறைவனைத் தெருதோறும் தேடுவதும் இல்லை. காணாது அலறுவதும் இல்லை. என்ன செய்வதென்று அறியாது நிற்கின்றேன் என மாணிக்கவாசகர் தமது நெஞ்சின் துணை இல்லையெனில் ஏற்படும் அவலங்களை எடுத்துரைக்கின்றார். அடியார்கள் தமது வாழ்வில் உயர்வுற நெஞ்சத்தைத் தமக்குக் துணையாக வைத்துக்கொள்ள வேண்டும். துணையாக இருப்பதற்கேற்ப நெஞ்சத்தை அமைத்துக் கொள்ளுதல் அடியார்களின் அடிப்படைக் கடமையாகும். அலைபாயும் நெஞ்சத்தால் என்ன செய்வது என்று புரியாத பலனாகாத நிலையே மனிதனுக்கு ஏற்படும் என்பதை மாணிக்கவாசகர் தெளிவுபடுத்துகிறார்.

"மாறி நின்றெனைக் கெடக்கிடந்தனையை எம்
மதியிலி மடநெஞ்சே"

என மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். எனது அறிவில்லாத மூடமனமே, எனக்கு எதிரியாய் நிற்கிறாய். நான் நன்னெறியற்றுக் கெடுவதற்கென இருக்கிறாய் எனத் தனது மனத்தின் ஒழுக்கமற்ற தன்மையை மாணிக்கவாசகர் தெரிவிக்கின்றார். இறையருள் பெற மனம்

ஒழுக்கத்துடன் இருக்க வேண்டும் என்பது மாணிக்கவாசகர் கூற்றிலிருந்து நமக்குப் புரிகின்றது.

இறையருள் பெற எத்தகு நெஞ்சம் வேண்டும் என்பதற்கும் மாணிக்கவாசகர் கீழ்க்கண்ட பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

"யான்ஏதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமான்
எம்மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே".

மாணிக்கவாசகர் மேற்சொன்ன பாடலில், நான் பிறப்பதற்கு அஞ்சமாட்டேன். இறப்பை எண்ணி பயப்படமாட்டேன். வானத்தையே (அதாவது உலகையே) பரிசாகத் தந்தாலும் ஏற்கமாட்டேன். மண்ணாளும் அரசனை அண்டியிருந்து அவனைப் போற்றி வாழமாட்டேன். தேன்சொரியும் கொன்றைமாலை அணிந்த சிவபெருமானின் அருள் என்று பெறுவேன் என்பதுதான் எனது நினைப்பும் வருத்தமுமாகும் என்கிறார். பிறப்பு இறப்பு பற்றி அஞ்சாத, எப்பொருளின் மீதும் மையல் கொள்ளாத, இறைவன் திருவடியினை மட்டுமே நினைக்கும் நெஞ்சம் இருப்பின் வினையேன் அடியேன் ஆகி சிவபதம் கண்டு இன்புற்று வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்.

திருமூலர் தமது திருமந்திரத்தில்

"அரன்அடி சொல்லி அரற்றி அழுது
பரன்அடி நாடியே பாவிப்ப நாளும்
உரன்அடி செய்தங்கு ஒதுங்கவல்லார்க்கு
நிரனடி செய்து நிறைந்து நின்றானே".

என்ற பாடலில் அழுதால் பெறலாம் அவனருளை என்பதை விளக்குகின்றார். இறைவனை நினைத்து உருகும் நெஞ்சம் வேண்டும். சிவபெருமானின் திருவடியினை நினைந்து சொல்லி அலறி அழுது, பரமனின் அடியினை என்றும் நினைத்திருந்து, சிவனருள் உண்டென்று உறுதியான உள்ளத்தோடு இருப்போர்க்கு நிறைந்த திருவடிப்பேறு நிறைந்திருக்கும் எனத் திருமூலர் தெரிவிக்கின்றார். இறைவனின் திருவடியினைப் பெற எத்தகு நெஞ்சம் வேண்டுமென்பது நமக்குப் புரிகின்றது.

"எண்ணிலேன்திரு நாமமஞ் செழுத்தும் என்ஏழைமை யதனாலே
நண்ணிலேன்கலை ஞானிகள் தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணிலேபிறந் திறந்துமண் ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியாரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே".

என மாணிக்கவாசகர் தமது எண்ணத்தின் வடிவத்தை விளக்குகிறார். எனது அறியாமையின் காரணமாக "நமச்சிவாய" என்ற ஐந்தெழுத்துத் திருநாமம் என் நெஞ்சில் இல்லை. கலைஞானிகளோடு சேரவில்லை. நல்வினைகளைச் செய்யவில்லை. மண்ணிலே பிறந்து இறந்து மண்ணாகிவிட இருந்தேன். சிவபெருமான் எனை ஆட்கொண்டு தமது அடியார் கூட்டத்தில் சேர்த்தது வியப்பாக உள்ளது என மாணிக்கவாசகர் தெரிவிக்கின்றார். இப்பாடல் நமக்குத் தெரிவிக்கும் தெய்வீகக் கருத்தாவது – நமது நெஞ்சம் விழிப்புடன் இருந்து "நமச்சிவாய" என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை செல்லிக் கொண்டிருக்க வேண்டும். இறையருள் பெற்ற கலைஞானிகளோடு சேர்ந்திரு எனச் சொல்லும் நெஞ்சம் இருந்திட வேண்டும். நல்வினைகளை ஆற்றி, பால் நினைத்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நிற்கும் எம்பிரானின் திருவடியினையே என்றும் நினைந்துருகும் நெஞ்சம் வேண்டும். நீதியாவன யாவையும் நினைக்க வேண்டும். நினைப்பவரோடும் கூடியிருக்க வேண்டும் என்பதும் மாணிக்கவாசகரின் அறிவுரையாகும்.

மனம் நம்மோடு ஒன்றுபடவில்லையெனில் நாம் மனித குலத்தோடு ஒன்றுபட இயலாது. இறைவனை நினையாத நெஞ்சம் பிண நெஞ்சமாகி விடும். மேலோங்கிய வாழ்விற்கு மேலோங்கிய எண்ணங்கள் நெஞ்சத்தில் வேரூன்றி நிற்க வேண்டுமென மாணிக்கவாசகர் அறிவுறுத்துகின்றார். மனிதன் மனிதனுக்குச் செய்யும் உதவிக்கு கைமாறு செய்திட முடியும். இறைவன் அடியார்க்குச் செய்யும் உதவிக்கும் அருளுக்கும் கைமாறு என்பது கிடையுவே கிடையாது. இறைவனது அருளுக்கு நாம் கைமாறு செய்திட இயலாது.

"யான் இதற்குஇலன் ஓர்கைமாறே" – என மாணிக்கவாசகர் தாம் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதை மனம் உருகித் தெரிவிக்கின்றார். இறையருளினை நாடும் எண்ணத்தை நெஞ்சில் நிரப்புவோம். நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் என்றைக்கும் அரணாகத் துணை நிற்பான் என்பதைத் திண்ணமாகக் கொள்வோம்.

—

குன்றக்குடியில் குருபூசை விழா

நம் குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வர் திருவருள்திரு தெய்வசிகாமணி தேசிக பரமாசாரிய சுவாமிகளின் மகாகுருபூசை விழா 31.8.2015, 1.9.2015 ஆகிய இரு நாள்களிலும் சிறப்பாக நடைபெற்றது.

31.8.2015 குருமுதல்வர் நட்சத்திரமாகிய பூரட்டதித் திருநாளில் 46ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவண்ணாமலைக்குச் சென்று அன்று காலை குருமுதல்வர் குருமூர்த்த வழிபாடு சிறப்பாகச் செய்து வழிபட்டார்கள்.

மறுநாள் 1.9.2015 காலையில் குன்றக்குடியில் திருமடத்தில் எழுந்தருளியுள்ள அருள்தரு காளத்திநாதருககுச் சிறப்பு வழிபாடு செய்து கொண்டார்கள். பின்னர் 45 குருமகாசந்நிதானம் குருமூர்த்தத்திற்குச் சென்று வழிபாடு செய்து கொண்டார்கள். அதன்பின் காலை 9.30 மணியளவில் குருமுதல்வரின் திருவுருவப்படம் திருவீதிஉலா வந்தது. இந்தத் திருவீதி உலாவில் பல நூற்றுக்கணக்கான அன்பர்களும் பள்ளி மாணவ, மாணவியரும் கலந்து கொண்டனர்.

காலை 10.30 மணி அளவில் சமய இலக்கியவிழா தொடங்கியது. திரு. அரு. மாசிலாமணி ஓதுவார் இறைவாழ்த்துப் பாடினார். இந்நிகழ்ச்சியை தவத்திரு குன்றக்குடி அடிகளார் மகளிர் கல்வியியல் கல்லூரிச் செயலர் திரு. டாக்டர். எஸ்.மோகன் அவர்கள் தொடக்கவுரையாற்றித் தொடங்கி வைத்தார். திருவருள்திரு 46ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமை வகித்தார்கள். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.டாக்டர். எஸ். சுப்பையா அவர்கள், திரு. மரு. பரமகுரு எழுதிய "தெய்வத்தமிழ்" "ஆளுமைச் சிந்தனைகள்" இரு நூல்களையும் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். கோவை அருள்நெறிச் செல்வர் திரு. பழ.தரும. ஆறுமுகம் அவர்கள் நூல்களின்

முதற்படிகளைப் பெற்றுச் சிறப்பித்தார். திரு. முனைவர். சொ.சேதுபதி அவர்கள் நூல்கள் பற்றிய திறனாய்வுரை நிகழ்த்தினார்.

பின்னர் பேராசிரியை முனைவர்.யாழ்.சு. சந்திரா அவர்கள் "மங்கையர்க்கரசியார்" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுரையாற்ற முற்பகல் நிகழ்ச்சி இனிது நிறைவேறியது.

பிற்பகல் 2.30 மணி முதல 4.30 வர மதுரை கலைமாமணி முனைவர் தி.சுரேஷ்சிவம் திருமுறை இன்னிசை நடைபெற்றது.

பிற்பகல் 4.30 மணியளவில் பராட்டு விழா தொடங்கியது. இவ்விழாவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் திரு.டாக்டர்.ரவிவீரப்பன அவர்களுக்கு "அறமனச் செம்மல்" என்ற பட்டமும் பேராசிரியர் திரு.சொ.சொ.மீ. சுந்தரம் அவர்களுக்குத் "தமிழாகரர்" என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தருளினார்கள். பாராட்டுப் பெற்றவர்களைப் பாராட்டி, விஞ்ஞானி, திரு. டாக்டர். கி. பாலகிருஷ்ணன் அவர்களும், புலவர் திரு.மு. இராசரத்தினம் அவர்களும் பிள்ளையார்பட்டி அருள்திரு கோவிந்தானந்த சுவாமிகள் அவர்களும் பேசினர். பாராட்டுப் பெற்றவர்களின் ஏற்புரைக்குப் பின் மங்கலவாழ்த்துடன் நிகழ்ச்சி சிறப்பாக நிறைவேறியது.

திரு. முனைவர். சேதுபதி நிகழ்ச்சி இணைப்புரை வழங்கினார்.

இரவு 7.00 மணி அளவில் திருவருள்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுவீற்றிருந்தருளி அன்பர்களுக்கெல்லாம் திருநீற்றுப் பிரசாதம் வழங்க மகாகுருபூசைவிழா இனிதே நிறைவெய்தியது.



நான் நினைத்தது நிறைவேற வேண்டும் என்றால், அதற்கு நான் தீவிரமாக ஆசைப்படவேண்டும். அது நிச்சயமாக நடந்தே தீரும் என்று நம்ப வேண்டும்... நான் பொடியனாக இருந்த காலத்திலிருந்தே, வானத்து மாயாஜாலங்கள், வானவீதியில் வட்டமடிக்கும் பறவைக் கூட்டங்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைவேன். உச்சியில் பறக்கும் கொக்குகளையும், சீகல் பறவைகளையும் அடிக்கடிக் கவனித்துப் பார்ப்பேன். நாமும் அதைப்போல் பறக்க வேண்டுமே என்று ஏக்கமாக இருக்கும். - அப்துல் கலாம்

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதம்....

மதிப்புமிகு தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கு வணக்கம்.

தங்கள் மூன்று நிமிட குறள் விளக்கங்களை சென்னை வானொலியில் கேட்டு மகிழ்ந்தேன். குறளை மட்டும் சொன்னால் கேட்போர் குறைவு. குறள் வழி நடந்த நிகழ்ச்சிகளை சேர்த்து விளக்கியது ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் பதிந்தது. என்னால் நாலு, ஐந்து தவிர மற்றவைகளைக் கேட்டுப் பயனடைந்தேன். இதோ அவற்றில் சில.

"திருடர்கள் முன் முகைதீன் ஆண்டவன் தன் தாயிடமிருந்து வேலைதேட சென்றதிற்கு வாங்கி வந்த பணத்தை பிழையின்றி சொன்னதால் தப்பித்தான். திருடர்களும் மனம் மாறி மதபோதகர்கள் ஆனார்கள்"

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

கும்பகோணத்தில் படித்த பையன் சிறுவயதில் மழையில் நனைந்து சட்டையை கழற்றி கையில் எடுத்துக்கொண்டு வகுப்பறையில் நுழைந்தான். இங்கிலாந்திலிருந்து வந்த ஆசிரியர் அவனுக்கு 8 அணா அபராதம் விதித்தார். ஆசிரியரைப் பார்த்து அந்தப் பையன் "ஐயா 8 அணா இருந்திருந்தால் ஒரு சட்டை வாங்கிப் போட்டிருப்பேன் என்றான். மனமுருகிய ஆசிரியர் அம்மாணவனுக்கு விதித்த அபராதமான எட்டாணாவையும் கொடுத்து போட்டுக்கொள்ள ஒரு சட்டையையும் வாங்கித் தந்தார். அந்தப் பையன்தான் பிற்கால Rtd.Hon'ble சீனிவாச சாஸ்திரியார். "ஒரு முறை இவர் இங்கிலாந்தில் தனக்கு சட்டை கொடுத்த ஆசிரியரைப் பார்க்கச் சென்றார். ஆசிரியர் ஊரைக்கூட்டி விருந்து கொடுத்தார். சாஸ்திரியார் தன் கையில் வைத்திருந்த பெட்டியை திறந்து ஆசிரியர் கொடுத்த சட்டையைக் காட்டினார். இது காலத்தினால் செய்த உதவி.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

பஸ்தானி ஓர் இசைக்கலைஞன். அவரோடு இருந்த ஒரு வாத்தியக் கலைஞன் குடிபோதையில் அவர் வைத்திருந்த வாத்தியத்தால் பஸ்தானி தலையில் அடிக்க, தலையும் உடைந்தது. வாத்தியமும்

உடைந்தது. அடித்தவருக்கு பஸ்தானி ஒரு கடிதம் எழுதினார். அந்த கவருக்குள் ஒரு தித்திப்புப் பண்டத்தையும், சிறு தொகையையும் வைத்து அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தார். "இந்தப் பணம் தங்கள் உடைந்த இசைக் கருவிக்கு, தின்பண்டம் அவர் கசப்பான வார்த்தைகளுக்கு" இசைக் கலைஞரின் இனிய வார்த்தைகளால் இசைக்கருவிக் கலைஞர் மனம் மாறி குடிப்பழக்கத்தையும் விட்டுவிட்டார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

இதுபோல பசும்புல் தோன்ற மழைத்துளி தேவை. இவைதான் பூஉலகம் மகிழ பசுமையை வளர்க்கும். ஜோத்பூரில் வெட்டும் மரங்கள் வெட்டுப்படாமல் இருக்க பல ஆண்டுகளுக்கு முன் மரத்தோடு நூற்றுக்கணக்கானோர் வெட்டுண்டனர். அன்று தோன்றியது தான் பசுமை இயக்கம்.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தலை காண்பதரிது".

கற்பதனால் கிடைக்கும் பயன் அதிகம்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

இறக்கும் தருவாயிலும் பேரறிஞர் அண்ணா படித்துக்கொண்டே இருந்தார். சுனாமியால் இழுத்துச் செல்லப்பட்ட தன் தந்தையைக் காக்க சிறுவன் கடலில் குதித்தார். ஏனப்பா இந்தச் செயல் என்று கேட்டவருக்குச் சொன்னார். "ஐயா, நீங்கள் தினம் படுக்கும் படுக்கையில் இதற்கு முன் படுத்தவர்கள் மாண்டுள்ளனர். ஆனால் அதில்தானே நீங்கள் படுக்கிறீர்கள்" என்றார்.

"நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

நான் படித்து மகிழ்ந்து குறித்துள்ள அத்துணையையும் எழுதித் தங்கள் காலத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. அத்துணை விளக்கங்களும் வெல்லக்கட்டிகள். நான் எழுதி வைத்துள்ளேன். காலம் வரும்போதெல்லாம் பயன்படுத்துவேன்.

தங்களுக்கு என் அன்பும், வணக்கமும்.

– மேதகு நீதியரசர். பு.ரா. கோகுலகிருஷ்ணன்

சென்னை – 20,

29.8.2015

எனது உயிருக்கு நிகரான தமிழ்க்கடலே! 15.9.2015 கொடைத் தென்றல் 100.5ல் சுவைத்தேன். அறிஞர் அண்ணாவைப் பற்றி தங்கள் தந்த "நல்ல தீர்ப்பு" நெஞ்சுக்கு இதமூட்டியது. எவ்வளவுதான் கற்றீர்கள்! என்னாதான் கந்தன் தங்களுக்கு ஞானம் தந்துள்ளான். வியக்கின்றேன் அய்யா! வியக்கின்றேன். எந்தச் சொல் தங்கள் வாய் வந்தாலும் இனிக்கிறதே! சுவைக்கின்றதே! குன்றக்குடி வாழும் தமிழ் மன்றமே! பொதிகைத் தென்றலே! நேர் வந்து தங்கள் திருமுகம் காண இந்த அடியேனுக்கு வாய்ப்பில்லை! இருந்த இடத்தில் இருந்து கொண்டே தங்கள் மலரடி பணிந்து வணங்குகிறேன்.

என்னைப் பொருத்தமட்டில் தாங்கள் காவி உடை தரித்த கம்பன்! துறவு வாழ்வு வாழும் தூய தமிழ்! வாழ்க நினது புகழ் – வளர்க நினது தமிழ்ப்பணி – கந்தப் பெருமான் தங்களுக்கு நீண்ட ஆயுள் தரட்டும். தொடர்ந்து மிளிரட்டும் தங்களின் சொல்லாற்றல்.

வாழ்க வளமுடனே!

– தங்களின் அன்பு பக்தன்

துரை. வீரப்பன், செ. மேலூர்



மாணவர்களிடத்தில் கேள்வி கேட்கும் திறமையையும் கற்பனை வளத்தையும் தொழில் முனைவோராகச் செயல்படும் வகையிலும், தலைமையேற்கும் பண்பையும் கல்வியாளர்கள் உருவாக்கி அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் திகழவேண்டும். இன்று தொழிற்கல்வி வர்த்தக நோக்கில் செயல்பட்டுவருகிறது. நடுத்தர மக்களாலேயே பெறமுடியாத சூழ்நிலையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களால் இத்தொழில் கல்வியை எவ்வாறு பெறமுடியும். மாநில அரசுகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிலையங்களின் நிர்வாகங்கள் இவற்றை மறுஆய்வு செய்து கல்வியின் தரம் குறையாமல் அதற்கான செலவைக் குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். கல்வி என்பது ஒருவரின் கண்களைத் திறப்பதாகும். இது வியாபாரம் அல்ல. – **அப்துல் கலாம்**

தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் கற்றாருள் கற்றார் என்ற தலையங்கக் கட்டுரை (பங்குனி – சித்திரை) மிகவும் தெளிவாக, எளிய நடையில் எப்படிப் பேசவேண்டும், எப்படிப் பேசினால், பயன்விளைவிக்கும் என்பதற்கு சுவாமி விவேகானந்தர் அறிஞர் அண்ணா, ஆப்ரகாம் லிங்கன் போன்றோரின் சொற்பொழிவுகளை மேற்கோள் காட்டி எழுதி இருக்கும் வண்ணம் என்னை மிகவும் கவர்ந்தது.

தவத்திரு பொன்னம்பல அடிகள் கம்பனின் இராமயணத்திற்கு எளிய – இனிய உரை ஒன்றை எழுதினால் நன்றாக இருக்கும். இது என் ஆசை.

– கவிஞர். பரணி, மும்பை


ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவடிகட்கு வணக்கம். வாழி! மக்கள் சிந்தனை மலர் : 30 வழிகாட்டும் வள்ளுவம் சம்பவங்களின் சிகரம்!

அப்துற்றகீம் நூல் படித்துள்ளேன். எனினும் சந்நிதானம் தரும் சம்பவங்கள் குறளுக்குத் தரும் பாடங்களாகும்.

மதுவை ஒழிப்போம் – மனித நேய விஞ்ஞானி எழுத்தோவியங்கள் வழிகாட்டும் ஒளிவிளக்காய் உள்ளன.

52ஆம் நாண்மங்கலம் பாடல் உணர்த்துவது போல, பொழிவுகள், கல்விப்பணி, திட்டப்பணிகள் பெருகிடும் பணிச்சுமைகள் தாங்கிடும் திண்மை பெற்ற சந்நிதானம் அவர்களை 84 வயதில் யானும் போற்றி திருவடி வணங்குவேன். கவிஞரின் தற்குறிப்பேற்றக் கவிதை வாழ்க!

– தா. குருசாமி தேசிகர், மதுரை



"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்று சிறந்த தமிழ் காவியமான சிலப்பதிகாரம் தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறை மற்றும் பொறுப்புணர்வு பற்றி எடுத்துரைக்கிறது. உயர்பதவிகளில் உள்ளவர்கள் நீதிநெறியுடன் நடந்துகொள்ளவேண்டும். இல்லையென்றால் அந்த நீதியே அவர்களைக் கொன்றுவிடும் என்பது இதன் பொருளாகும். நீதிநெறிமுறையை கடைபிடிக்கத் தவறுபவர்கள் தனிநபராக இருந்தாலும் சரி மாநிலங்களாக இருந்தாலும் சரி அவரவர் செய்கைகளுக்கு அவரவரே பொறுப்பாகும். – அப்துல் கலாம்

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி – 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி
மக்கள் சிந்தனை
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்
தொலைபேசி எண் : [illegible]

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி



குன்றக்குடியில் குருபூசை விழா
1-9-2015



BOOK POST

Book pocket containing printed matter

Price Rs. 8-00

MAKKAL CHINTHANAI-August-October 2015 Date of Publication 10-10-2015

பெறுநர்

திரு திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்,
கோவிலூர் ஆதீனம்,
கோவிலூர்,
மானகிரி-(அஞ்சல்),
காரைக்குடி-(வழி). அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166